Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு


தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

ஆசியாவின் நம்பர் 1 சீமேந்து
SLS 107 அங்கீகாரம் பெற்றது.
ISO 9002 தரம் பெற்றது.
BSS 12 - 1991 தரத்திற்கு அமைவானது.
இவை அனைத்தையும் கொண்ட உயர்தர சீமேந்து.
ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
சீமேந்து
ரா ம் கோ
(சி-485)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 தை 13 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 துல்க.:தா 23 (27.01.2003) திங்கட்கிழமை இதழ் : 118

# சர்வதேச நாடுகள் உதவி செய்வதை இந்தியா ஒருபோதும் தடுக்க முடியாது!

## நமது ஈழநாட்டுக்கு வெஸ்பேர்க் சிறப்புப் பேட்டி



(நமது நிருபர்)

**இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் விடயத்தில் இந்தியா விலகிவிட முடியாது. ஏதோவொரு வகையில் இந்தியாவின் பங்களிப்பு பெறப்படும். ஆனால் ஏனைய சர்வதேச நாடுகள் இலங்கை விவகாரத்தில் தீர்வுக்கு உதவி செய்வதை இந்தியா ஒருபோதும் தடுக்கமுடியாது என நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க் நமது ஈழநாட்டுக்கு அளித்த சிறப்புப் பேட்டியில் தெரிவித்தார்.**

இந்தியக் குடியரசு தினத்தை முன்னிட்டு கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவரின் இல்லத்தில் நேற்றிரவு விருந்துபசாரமொன்றில் கலந்து கொண்ட அவர் நமது நிருபரிடம் தனிப்பட்ட முறையில் பேசும்போது இதனைக் கூறினார்.

அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பான விடயங்களில் நல்ல கருத்தொருமைப்பாட்டுடன் செயற்பட்டு வருகின்றனர். அமைச்சர் பேராசிரியர் பீரிஸும் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கமும் அடிக்கடி தொடர்புகொண்டு பேசி வருகின்றனர் என, நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க் தெரிவித்தார்.

அரசியல் தீர்வு பற்றிய விடயங்களில் கடினமான விடயங்களைப் பேசுவதை தற்போது அவர்கள் தவிர்த்து வருகின்றனர் என்றும்

(10ஆம் பக்கம் பார்க்க)

# இணையத்தை மந்தமாக்கிய உலகளாவிய வைரஸ் பாதிப்பு!

## யாழ்ப்பாணத்திலும் எதிரொலித்தது

உலகளாவிய இணையத்தளத் தொடர்புகளில் கடந்த சனியன்று வைரஸ் தாக்கியதால் பாதிப்பு ஏற்பட்டது.

இதனால் இணையத்தளத் தொடர்புகள் திடீரென மந்தகதி அடைந்தன. இணையத்தளத் தொடர்புள்ள லட்சக்கணக்கான கணினிகளில் இந்த வைரஸ் தாக்கியது. இது குறித்து அமெரிக்காவின் சமஷ்டிப் புலனாய்வுச் சேவை விசாரணைகளை ஆரம்பித்திருக்கின்றது.

வைரஸ் தாக்கியதால் இணையத்தளங்களின் தொடர்புகளில் பலத்த நெருக்கடி ஏற்பட்டது. இது ஒரு திட்டமிட்ட (10ஆம் பக்கம் பார்க்க)

# மார்ச்சில் நாடாளுமன்ற கலைப்பு மே மாதம் தேர்தல் நடத்தப்படும்!

## ஜனாதிபதி சந்திரிகா ஆலோசனை

நாடாளுமன்றத்தைக் கலைத்து புதிய தேர்தல் ஒன்றை நடத்துவதற்கு ஜனாதிபதி சந்திரிகா தயாராகி வருவதாகப் பொ.ஐ.முவின் செயலாளர் டி.எம்.ஜெயரத்ன தெரிவித்திருக்கிறார்.

எதிர்வரும் ஜூன் மாதம் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் நடைபெறவிருக்கிறது. இக்கூட்டத்திற்கு முன்னர் நாடாளுமன்றத்தைக் கலைத்து தேர்தலை நடத்துவதற்கு ஜனாதிபதி சந்திரிகா தீர்மானித்திருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

மார்ச் மாத இறுதியில் நாடாளுமன்றத்தைக் கலைத்து மே மாதம் புதிய தேர்தலை நடத்துவது குறிதது ஜனாதிபதி கவனம் செலுத்தியுள்ளார்.

நாட்டின் பாதுகாப்பு நிலையைக் காரணம் காட்டியே நாடாளுமன்றக் கலைப்பை மேற்கொள்வதற்கு ஜனாதிபதி சந்திரிகா முடிவு செய்திருப்பதாகவும் கூறப்படுகின்றது.

ஜே.வி.பிக்கும் பொ.ஐ.முக்கும் இடையில் இணக்கம் ஏற்பட்டதும் நாடாளுமன்ற கலைப்பு முயற்சிகள் மேலும் தீவிரம் பெறும் எனத் தெரிய வருகின்றது.

## ஆதாரமான தகவல்கள் ஏதுமின்றியே

# புலிகளின் 10,000 ஆட்சேர்ப்பு பற்றி கருத்துச் சொன்னாராம் ஜனாதிபதி!

விடுதலைப் புலிகள் பத்தாயிரம் பேரை புதிதாகப் படையில் சேர்த்துள்ளதாக ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்த கருத்து எந்த அடிப்படை ஆதாரமும் அற்றதென கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

புரிந்துணர்வு உடன்பாடு கைச்சாத்திடப்பட்ட பின்னர் புலிகள் பத்தாயிரம் பேரை படையில் சேர்த்திருப்பதாக ஜனாதிபதி சந்திரிகா கூறியிருக்கிறார்.

ஆனால், ஜனாதிபதி சந்திரிகாவுக்கு இந்தத் தகவலைப் பெற்றுக் கொள்வதற்கு அவருக்கெனத் தனியானதொரு புலனாய்வு அமைப்பு கிடையாது. இராணுவம், கடற்படை, விமானப்படை மற்றும் பொலிஸ் புலனாய்வுச் சேவைகள் மூலமே அவர் புலனாய்வுத் தகவலைப் பெறமுடியும்.

(10ஆம் பக்கம் பார்க்க)

## மழைக்கவசங்களை கொண்டு சென்றவர் கைது!

வவுனியாவிலிருந்து வன்னிக்கு 200 மழைக் கவசங்களை எடுத்துச் சென்ற ஒருவர் ஓமந்தை இராணுவச் சோதனைச்சாவடியில் வைத்து சந்தேகத்தின்பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இந்த மழைக்கவசங்கள் இராணுவ உடையை ஒத்ததாக இருந்ததென வவுனியா பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

## விண்ணாணம் விநாசியர்



இனிப் பச்சையாய்க் காய்கறி கொண்டு வந்தாலும் பிரச்சினை குடுப்பினமோ...

# தேர்தலைச் சாட்டி அமைதியை குழப்பினால் அவமானமடைவீர்!

## பொ.ஐ.முவுக்கு அமைச்சர் ஜோன் அமரதுங்க எச்சரிக்கை

(கொழும்பு)

சமாதான முயற்சிகள் கனிவடைந்து வட-கிழக்கில் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்காக ஜூன் மாதத்தில் உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் நடைபெறவுள்ள நிலையில், பொ.ஐ.முவீன் டி.எம்.ஜெயரட்ண மே மாதம் பொதுத்தேர்தல் நடக்கும் என அச்சமூட்டியுள்ளார். இவ்வாறு சமாதான முயற்சிகளைக் குழப்ப முற்பட்டால் அவர்கள் வீண் அவமானங்களைச் சந்திக்க நேரிடும் என உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்திருககிறார்.

திருகோணமலையில் நடந்த

(10ஆம் பக்கம் பார்க்க)

# உயர் பாதுகாப்பு வலயத்தில் இருக்க படையினருக்கு சட்ட வலு இல்லை!

## வெளியேறுமாறு வழக்குத் தாக்கல் செய்யலாம்

வட-கிழக்குப் பகுதிகளில் அவசரகாலச் சட்டத்தின் கீழேயே அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் நிறுவப்பட்டன. அவசரகாலச் சட்டம் காலாவதியாகி இரண்டு வருடங்களாகிவிட்டது. அத்துடன் உயர் பாதுகாப்பு வலயங்களும் வலுவிழந்துவிட்டன.

- என தமிழ்க் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அ.விநாயகமூர்த்தி தெரிவித்திருக்கிறார்.

அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

காலாவதியான அவசரகாலச்சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட உயர் பாதுகாப்பு வலயங்களில் படையினர் தொடர்ந்தும் தங்கியிருப்பது அநீதியானது. உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள வீடுகளில் குடியிருக்கும் படையினரை வெளியேறுமாறு கோரி வழக்குத் தாக்கல் செய்யமுடியும். அவ்வாறு யாராவது வழக்குத் தாக்கல் செய்ய முன்வந்தால் அதற்கு உதவத் தயாராக இருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# குடாநாட்டில் செய்த வேலைகள் அமைச்சுக்களிடம் கேட்கிறார் ரணில்!

யாழ். குடாநாட்டில் செய்த வேலைத்திட்டங்கள் குறித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு அனைத்து அமைச்சுக்களுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டுள்ளார்.

பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன் அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும் இது தொடர்பாகச் சுற்றறிக்கையை அனுப்பியுள்ளார்

யாழ். குடாநாட்டில் செய்த வேலைத்திட்டங்கள் குறித்தும், யாழ். குடாநாட்டுக்கு ஒதுக்கப்பட்ட நிதி குறித்தும் அறிக்கை சமர்ப்பிக்குமாறும் அவர் சுற்றறிக்கையில் கேட்

(10ஆம் பக்கம் பார்க்க)

SERENDIB AIRLINE
யாழ்ப்பாணத்தில் இருந்து வெள்ளவத்தை விரையும் அழையுங்கள்
J/F 021 - 2223916, 0777 - 517019
01-505632, 074-612656, 01-390128
(சி-518)

# கடுமையான பாதுகாப்புகளுடன் நடந்த இந்திய குடியரசுத் தின வைபவங்கள்



இந்தியா நேற்று தனது ஐம்பத்தி நான்காவது குடியரசுத் தினத்தினைக் கொண்டாடியது.

இக்குடியரசு தினக் கொண்டாட்டங்களில் ஈரானிய ஜனாதிபதி முகமட் கதாமி பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

தலைநகர் டெல்கியில் பல்லாயிரக்கணக்கான இராணுவத்தினரும், பொலிஸாரும் காவலில் ஈடுபடுத்தப் பட்டிருந்தனர். காஷ்மீரில் பிரிவினை கோரும் போராளிகள் குடியரசு தினத்தன்று இந்திய அரசியற் தலைவர்களைக் கொல்வதற்கு முயற்சிக்கலாம் என்ற அச்சங் காரணமாகவே பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

குடியரசு தினத்தினை முன்னிட்டு இந்திய இராணுவத்தினரின் மிக நீண்ட அணிவகுப்பு 21 பீரங்கி வேட்டுக்களுடன் ஆரம்பமாகியது. இதன்போது, ஹெலிகொப்டரிலிருந்து மலர்தூவி வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டது. அணி வகுப்பில் இந்திய இராணுவத்தினரின் கனரக ஆயுதங்களும் தளபாடங்களும் பவனியாக எடுத்து வரப்பட்டவை குறிப்பிடத்தக்கது.

## நேபாள பொலிஸ் அதிகாரி சுட்டுக்கொலை

நேபாளத்தின் ஆயுதப் பொலிஸின் தலைமை அதிகாரி சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். தலைநகர் காத்மண்டுவில் - வீட்டுக்கருகே அவர் நடந்து சென்று கொண்டிருக்கையில் இச்சம்பவம் நடைபெற்றது. இத்தாக்குதலின்போது அவரது மனைவி மற்றும் மெய்ப்பாதுகாவலர் ஆகியோரும் கொல்லப்பட்டனர்.

இந்தத் தாக்குதலை நேபாளிய மாவோயிஸ்ட் போராளிகள் மேற்கொண்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது. இத்தாக்குதல் தொடர்பாக இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை.

நேபாளத்தில் ஆயுதம் தாங்கிய பொலிஸார் - கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னதாக மாவோயிஸ்ட் போராளிகளைக் கட்டுப்படுத்த உருவாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

## ஐம்பது ஆண்டுகளுக்குப் பின்னர் தாய்வான் விமானம் சீனாவில்!

ஐம்பது ஆண்டுகளுக்குப் பின்னர் முதற்தடவையாக தாய்வான்



விமானமொன்று சீனாவில் தரையிறங்கியுள்ளது.

1994 ஆம் ஆண்டு நடைபெற்ற சிவில் யுத்தத்தின் பின்னர் இரு நாடுகளுக்கும் இடையில் இருந்த பகையுணர்வு காரணமாக கடந்த ஐம்பது ஆண்டுகளாக எவ்வித தொடர்பும் அற்ற நிலையே நிலவியது.

சீனாவில் வந்திறங்கிய தாய்வான் விமானம், லூனா் புதுவருட விடுமுறையைக் கழிக்கவுள்ள பயணிகளை ஏற்றிச்சென்றது.

சீனாவிற்கும் தாய்வானுக்கும் இடையில் இருந்த முறுகல்நிலை காரணமாக, சீனா தனது விமானங்களைத் தாக்கக்கூடும் என்ற அச்சத்தினால் சீனாவுக்கு நேரடிப் போக்குவரத்தினை தாய்வான் இதுவரை மேற்கொள்ள விரும்பவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## கென்யத் தொழில் அமைச்சர் விமான விபத்தில் உயிரிழப்பு!



மேற்கு கென்யாவில் நடந்த விமான விபத்தில் அந்நாட்டின் தொழிற்துறை அமைச்சர் அஹமட் காலிப்பும் இரண்டு விமானிகளும் கொல்லப்பட்டனர். அத்துடன், நான்கு கென்ய அமைச்சர்களும் ஒரு நாடாளுமன்ற உறுப்பினரும் படுகாயமடைந்தனர்.

மேற்படி விபத்தானது தமக்கு பாரிய இழப்பினை ஏற்படுத்தியிருப்பதாக கென்ய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

மேற்கு கென்ய நாடான புஷ்சியாவில் உள்ள விமானத்தளத்தின் ஓடுபாதையிலிருந்து மேற்கிளம்பும் போதே விமானம் விபத்துக்குள்ளாகியுள்ளது. விமான ஓடுபாதையிலிருந்து மேற்கிளம்பக்கூடிய விமானத்தின் ஆகக்குறைந்த எடையை விட விபத்துக்குள்ளான விமானத்தின் எடை அதிகமாக இருந்ததே விபத்துக்குக் காரணம் எனத் தெரிய வருகின்றது.

உலகவலம்

விபத்துக்குள்ளான விமானக் கம்பனியினது அனுமதிப்பத்திரம் இரத்துச்செய்யப்பட்டுள்ளதுடன் அதன் மீது விசாரணைகளும் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்யுங்கள்
நமது ஈழநாட்டில்

கூறுவிலை கோரல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக திருநெல்வேலி பிரதான வளாக பெண்கள் விடுதி வளவினுள் அமைந்துள்ள, ஒவ்வொன்றும் 4.75 மீற்றர் விட்டமுள்ள இரு கிணறுகள் முற்றாக இறைத்து துப்புரவு செய்ய கூறுவிலை சமர்ப்பிக்க விரும்புவோர் 28.01.2003 பிற்பகல் 2.00 மணிக்கு முன் யாழ். பல்கலைக்கழக வேலைகள் அத்தியட்சகரைச் சந்திக்கவும்.

(தொலைபேசி இலக்கம்: 021-222 2483 இணைப்பு 212)

பதிவாளர்,
யாழ்.பல்கலைக்கழகம்.

தபால் பெட்டி இலக்கம் 57,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம். (சி-527)

ராஜா யாழ்ப்பாணம்.
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரே தின வெளியீடு
விஜய், ஸ்நேகா நடித்த
வசீகரா




10.30, 2.30, 6.00, 9.30 (சி-398)
ரிக்கற்றுக்களை முன்பதிவு செய்துகொள்ளவும்.

நிறைஞ்சனாஸ் சங்கானை
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
அஜித், விக்ரம், மகேஸ்வரி நடித்த
உல்லாசம்
வெள்ளி. சனி. ஞாயிறு இரவு 8.45 காட்சி
TOMB RAIDER (சி-397)

# செய்திப் படங்கள்




ஈராக் மீதான அமெரிக்காவின் தாக்குதல் முயற்சிகளைக் கண்டித்து இந்தோனேஷியாவில் முஸ்லிம் பெண்கள் நடாத்தும் ஆக்ரோஷமான ஆர்ப்பாட்டம் இது.



இந்தியக் குடியரசு தின அணிவகுப்பில் இந்தியாவின் நவீன தயாரிப்பான தொலைதூரம் பாயும் அக்னி ஏவுகணை.



லான்ட்குவாட்டில் நடைபெறும் உலகப் பொருளாதார அமைப்பின் உச்சி மாநாட்டில், உலகமயமாதலை எதிர்க்கும் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது வோட்டர் கனன் எனப்படும் அதிவேகமாகத் தண்ணீரைப் பீய்ச்சியடித்து மேற்கொள்ளப்படும் தாக்குதல்.

# இன்றைய நாள் இனிய நாள்

**27-01-2003 - திங்கட்கிழமை**

**மேடம்** :- அந்நியர் உதவி, தொழில் சிறப்பு, பணவரவு, அதிக பிரயாசை.

**இடபம்** :- பொருள் வரவு, நல்வாழ்வு, தானதருமம்.

**மிதுனம்** :- தேகபீடை, சத்துரு வெற்றி, அதிக பிரயாசம், நல்ல வாழ்க்கை.

**கர்க்கடகம்** :- மனப்பயம், தொழில் வெற்றி, திரவிய லாபம், குடும்ப சிறப்பு.

**சிங்கம்** :- நிலைப்பிரிவு, மனக்கிலேசம், பொருட்செலவு, அயலவர் உதவி.

**கன்னி** :- நண்பர்களால் நன்மை, தொழில் முன்னேற்றம், தேகசுகம், உற்சாகம்.

பிரபல சோதிடர்
எஸ்.குகநேசன்

**துலாம்** :- மனக்கவலை, பொருள்வரவு, திரவியலாபம், குடும்ப சுகம்.

**விருச்சிகம்** :- புத்திக்கேடு, மனக்கிலேசம், சிநேக நன்மை, பொருள் விருத்தி.

**தனு** :- நிலைப்பிரிவு, தனலாபம், களஸ்திர பீடை, ரோகபயம்.

**மகரம்** :- பொருள்வரவு, மகிழ்ச்சி, மனைவியால் சிறப்பு, பெரியோர் ஆதரவு.

**கும்பம்** :- நல்ல வாழ்க்கை, அமைதியான மனம், தனலாபம், புத்திரரால் நன்மை.

**மீனம்** :- குடும்ப சிறப்பு, களஸ்திரசுகம், திரவியலாபம், நல்வாழ்வு.

# தமிழ்மொழி அமுலாக்கத்தைச் சீராக்க அரசாங்கத்திடம் நோர்வே வலியுறுத்து!

## நாடளாவிய பயிற்சித் திட்டங்களும் நிதியுதவியும் அறிவிப்பு

(கொழும்பு)

அரசகரும மொழிக்கான அந்தஸ்தைப் பெற்றிருக்கும் தமிழ் மொழியை அமுலாக்குவதில் கூடிய கவனம் செலுத்தப்படவேண்டுமென்றும் - அரசாங்க மொழிக்கரும சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் தீவிரம் தேவையெனவும்- நோர்வே இராஜதந்திரிகள் - நீதி மற்றும் தேசிய நல்லிணக்க அமைச்சரிடம் வலியுறுத்திக் கூறியுள்ளனர்.

தேசிய நல்லிணக்க அமைச்சில் நடைபெற்ற கலந்துரையாடலொன்றில் பங்குபற்றிய- நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க் தலைமையிலான அந்நாட்டு இராஜதந்திரிகளே இந்தக் கோரிக்கையை விடுத்தனர்.

இந்த அமைச்சினால் மேற்கொள்ளப்படவுள்ள - தமிழ்மொழிக் கல்வித்திட்டங்களை நாடு முழுவதும் கொண்டுசெல்லும் யோசனைக்குத் தமது ஆதரவையும் நோர்வேத் தரப்பினர் தெரிவித்தனர்.

தேசிய நல்லிணக்க நிகழ்ச்சிப் பிரிவினால் நடைமுறைப்படுத்தப்படவுள்ள இப்புதிய திட்டத்தைப் பற்றி - திட்டப்பணிப்பாளர் கலாநிதி ரி.சுந்தரி காரியவசம் தெரிவிக்கும்போது -

பௌத்த பிக்குகள், பொலிஸார் மற்றும் பாடசாலை ஆசிரியர்களுக்குத் தமிழ்மொழிப் பயிற்சியை வழங்குவதற்கான திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இதன் மூலம் இனவேறுபாடுகளைக்களைந்து புரிந்துணர்வை ஏற்படுத்தமுடியும். இத்திட்டத்திற்கு ஒவ்வொரு நான்கு மாதங்களுக்கும் தலா 120 லட்சம் ரூபாவை நோர்வே அரசாங்கம் உடனடி உதவியாகத் தர முன்வந்துள்ளது எனத் தெரிவித்தார்.

# ஆனைக்கோட்டை கழகத்திற்கு வெற்றிக்கிண்ணம்

(ஆனைக்கோட்டை)

மாவத்தை விளையாட்டுக் கழகத்தினால் அண்மையில் நடாத்தப்பட்ட உழவர் விழாவின்போது, தெரிவு செய்யப்பட்ட கழகங்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியும் நடைபெற்றது.

சில்வெஸ்ரர் விளையாட்டுக் கழகத்திற்கும் - ஆனைக்கோட்டை ஐககிய விளையாட்டுக் கழகத்திற்குமிடையில் நடைபெற்ற ஆட்டத்தின் போது, ஆனைக்கோட்டை ஐக்கிய விளையாட்டுக்கழகம் தண்டனை உதை மூலம் 5:6 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று வெற்றிக் கிண்ணத்தைக் கைப்பற்றியது.

# பேச்சுக்களில் எதிர்க்கட்சிப் பிரதிநிதி; சாதகமாகப் பதில் தர அரசு தயக்கம்!

விடுதலைப் புலிகளுடனான பேச்சுக்களில் தமது தரப்பிலிருந்தும் ஒருவர் இடம்பெறவேண்டுமெனப் பொதுஜன ஐக்கிய முன்னணி விடுத்த வேண்டுகோளுக்குச் சாதகமான பதிலைத்தர அரசாங்கம் தயாராகவில்லையெனத் தெரியவருகின்றது.

அடுத்த மாதம் 7 ஆம் மற்றும் 8 ஆம் திகதிகளில் பேர்லினில் நடைபெறவுள்ள விடுதலைப் புலிகளுடனான ஐந்தாவது சுற்றுப்பேச்சுக்களில் - தாமும் கலந்துகொள்ள வேண்டுமென எதிர்க்கட்சியிலிருந்தும், ஜனாதிபதி வட்டாரத்திலிருந்தும் வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டிருந்தபோதும் - அரசாங்கம் இவ்விடயத்தில் தொடர்ந்தும் மௌனம் சாதித்தே வருகின்றது.

பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சியிலிருந்தபோது பிரிட்டிஷ் வெளிவிவகாரத் துணை அமைச்சர் லியாம் பொக்ஸ் மேற்கொண்ட உடன்படிக்கையின்படி நடப்பதென- அரசாங்கம் தீர்மானித்திருப்பதையே இந்த மௌனம் காட்டுவதாக - பிரதமருக்கு நெருக்கமான உயர் அரசாங்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

லியாம் பொக்ஸ் உடன்பாட்டின்படி - விடுதலைப் புலிகளுடனான பேச்சுக்களின் விபரம் எதிர்க்கட்சிக்குத் தெரியப்படுத்தப்பட வேண்டும் என இணக்கம் காணப்பட்டிருந்ததே தவிர, எதிர்க்கட்சியையும் பேச்சுக்களில் பங்குபற்ற அழைப்பது பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை என அந்த உயர் அதிகாரி சுட்டிக்காட்டினார்.

### பளைக் கோட்டத்தில் முக்கிய சந்திப்பு

ஏற்கனவே அறிவிக்கப்பட்டு ஒத்திவைக்கப்பட்ட பளைக் கோட்ட அதிபர், ஆசிரியர், கல்விசாரா ஊழியர்களுக்கான கூட்டம். இன்று பி.ப. 2 மணிக்கு பளை மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் என கிளிநொச்சி கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் அறிவித்துள்ளார். இக்கூட்டத்திற்குச் சம்பந்தப்பட்ட அனைவரையும் அவசியம் வருகை தருமாறும் கேட்கப்பட்டுள்ளது.(115)

# புலிகளுடனான அதிகாரப் பகிர்வு; படையதிகாரிகளுடன் பீரிஸ் பேச்சு!

விடுதலைப் புலிகளுடனான அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்வது பற்றிப் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் இராணுவ உயரதிகாரிகளுடன் கலந்துரையாடல் நடாத்தியுள்ளார்.

இக்கலந்துரையாடலின்போது ஒரு நாட்டிற்குள்ளே இரண்டு இராணுவ அமைப்பு இருக்காது எனவும், சமஷ்டி என்ற கட்டமைப்பின் கீழ் பொலிஸ் அமைப்பை மட்டும் வைத்திருக்கலாம் எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும், வரவு செலவுத் திட்டம், நிதிக் கொள்கை, வெளிநாட்டு உறவு மற்றும் பாதுகாப்புத் தொடர்பான திட்டமிடல் மற்றும் அமுலாக்கல் என்பன மத்திய அரசின் கீழ்க் கொண்டுவரப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

அமைதிப் பேச்சுவார்த்தைகள் என்பதன் பேரில் - விடுதலைப் புலிகள் கேட்பதையெல்லாம் கொடுத்து விடமுடியாது என்றும் அமைச்சர் பீரிஸ் அப்போது மேலும் தெரிவித்தார்.

# தனியார் துறையினரிடம் ஒழுக்கச் செயற்பாடு அவசியம்!

## ஹற்றன் நஷனல் வங்கித் திறப்பு விழாவில் ஜனாதிபதி

(கொழும்பு)

தனியார்துறையினர் தமது செயற்பாடுகளின்போது ஒழுக்கரீதியாக நடந்துகொள்ள வேண்டும் எனவும், செயற்பாடுகள் அனைத்தும் சேவை என்ற அடிப்படையில் நடைபெற வேண்டும்.

இவ்வாறு அண்மையில் கொழும்பில் நடைபெற்ற ஹற்றன் நஷனல் வங்கித் திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும்போது ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.

ஜனாதிபதி மேலும் அங்கு உரையாற்றும்போது,

தனியார் துறையினர் ஒழுக்க ரீதியாக நடந்து கொள்ளத் தவறி- மக்கள் மீது சட்டவிரோதமான முறையில் நடந்துகொள்ள முயன்றால், சம்பந்தப்பட்ட தனியார்துறைக்கு எதிராகச் சட்டநடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

# சமாதானத்தின் பலன்களை இலங்கையர் அனுபவிக்கின்றனர்!

## இந்தியத் தூதுவர் நிருபம் சென் கூறுகிறார்

சமாதான நடவடிக்கைகளின் பலன்களை இலங்கை மக்கள் அனுபவிக்கத் தொடங்கியுள்ளதாக இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் நிருபம் சென் கூறுகின்றார்.

இலங்கையின் ஒருமைப்பாடு, இறைமை ஆகியவற்றை உறுதிசெய்யும் வகையில் சமாதான நடவடிக்கைகளுக்கு இந்தியா பூரண ஒத்துழைப்பை வழங்கும் எனவும் தெரிவித்தார்.

இலங்கையின் பொருளாதார நலன்களைக் கருத்திற்கொண்டு உட்கட்டமைப்பு, விவசாயம், சக்தி, எரிசக்தி, ரயில் போக்குவரத்து உட்பட தெரிந்தெடுக்கப்பட்ட சில துறைகளின் அபிவிருத்திக்கென இந்தியா 100 மில்லியன் ரூபாவை கடனாக வழங்கும் என உயர் ஸ்தானிகர் கூறினார்.

இந்தியச் சுதந்திர தினவிழா இலங்கையில் உள்ள இந்திய தூதரகத்தில் நடந்தபோதே, உயர் ஸ்தானிகர் நிருபம் சென் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

# ஏறாவூரில் இளம் பெண் சடலமாக கண்டுபிடிப்பு

(மட்டக்களப்பு)

ஏறாவூர் ஆறுமுகத்தான் குடிசையில் நேற்றுக்காலை இளம்பெண்ணின் சடலம் ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. சடலத்தின் அருகேயிருந்த தினக்குறிப்பில் தயா என பெயர் காணப்படுவதாக தெரியவருகின்றது.

மேற்படி பிரஸ்தாப பெண் சில நாட்களுக்கு முன் ஏறாவூர் பிரதேச சபை உறுப்பினர் என்.குணசேகரனிடம் சென்று தனக்குத் தொழில் தருமாறும், குடும்பத் தலைவர் தன்னை வீட்டை விட்டு துரத்திவிட்டதாகவும் தெரிவித்துள்ளார். இதனைத் தொடர்ந்து பிரதேச சபை உறுப்பினர் குணசேகரன் தனது வீட்டில் இப்பெண்ணை பணிப்பெண்ணாக வேலைக்கு அமர்த்தியுள்ளார்.

தற்பொழுது ஏறாவூர் பொலிஸார் பிரதேசசபை உறுப்பினர் குணசேகரனைக் கைது செய்துள்ளனர். பிரஸ்தாப பெண்ணின் சடலம் மட்டக்களப்பு வைத்தியசாலையில் வைக்கப்பட்டபோதும் இதுவரை எவரும் உரிமை கோரவோ அடையாளங் காட்டவோ இல்லை எனத் தெரியவருகின்றது. (66)

# தனி அணியாகச் செயற்பட அனுமதி; அதாவுல்லா பிரதமருக்குக் கோரிக்கை!



(கொழும்பு)

அமைச்சர் ரவூப் ஹக்கீமுடன் முரண்பட்டுக்கொண்டு பிரிந்துசென்ற அமைச்சர் அதாவுல்லா தலைமையிலான நாடாளுமனற உறுப்பினர்கள், தாம் தனியணியாக நாடாளுமன்றததில் செயற்பட அனுமதிக்குமாறுகோரி - பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்குக் கடிதம் எழுதியுள்ளனர்.

ஐக்கிய தேசிய முன்னணிக்குத் தொடர்ந்து ஆதரவளிப்பதாயின் - கிழக்குப் புனர்வாழ்வு, புனரமைப்புத்துறை அமைச்சைத் தமது அணிக்குத் தர வேண்டுமென்றும், ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொண்ட இந்த அணியினர் தமது கடிதத்தில் பிரதமரை மேலும் கேட்டுள்ளனர்.

இந்த அணியில் அமைச்சர் ஏ.எல்.எம்.அதாவுல்லாவுடன், ஏ.எல்.எம்.ஹவ்ரத், நூர்தீன் மசூர், மொஹீதீன் அப்துல் காதர், எம்.பி.அசீஸ் ஆகிய நாடாளுமன்ற உறுப்பினர்களே தனியணியாகச் செயற்பட அனுமதிக்குமாறு கோரியுள்ளனர்.

# ஜே.வி.பியுடனான கூட்டணி சந்திரிகாவிடம் மகிந்த ஆட்சேபம்!

(கொழும்பு)

ஜே.வி.பியுடன் சிறிலங்கா சுதந்திரக்கட்சி கூட்டுச்சேர்வதற்காக நடை பெறும் ஏற்பாடுகள் குறித்து எதிர்க் கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தனது ஆட்சேபணையை ஜனாதிபதி சந்திரிகாவிடம் நேரில் எடுத்துக் கூறியதாகத் தெரியவருகின்றது.

எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் மாலை ஜனாதிபதி மாளிகையில் - ஜனாதிபதி சந்திரிகாவைச் சந்தித்தார். இருவருக்குமிடையிலான பேச்சுக்கள் இரண்டு மணி நேரம் நீடித்ததாகவும் தெரியவருகின்றது. (200)

# அமைதி பற்றிப் பிரிட்டிஷ் நிலை; விளக்க உயரதிகாரி வருகிறார்!

## பலதரப்பினரையும் சந்திக்க ஏற்பாடு

பிரித்தானிய நாடாளுமன்றத்தின் வெளிவிவகார மற்றும் கொமன்வெல்த் விடயங்களுக்கான செயலாளர் மைக் ஓ ப்ரெய்ன் இந்தவாரம் கொழும்பு வரவுள்ளார்.

'சர்வதேச பாதுகாப்புக்கு எழுந்துள்ள புதிய அச்சுறுத்தல்களுக்கான 'பதில்' என்னுந் தலைப்பில்- மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் ஒழுங்கு செய்துள்ள கருத்தரங்கில் இவர் பங்குபற்றவுள்ளார்.

கொழும்பில் தங்கியிருக்கும்போது - தற்போது நடைபெறும் அமைதிப் பேச்சுக்கள் தொடர்பான பிரிட்டிஷ் அரசாங்கத்தின் நிலைப்பாடு பற்றி, இராஜதந்திரிகளுடனும், அதிகாரிகளுடனும் இவர் முக்கிய கலந்துரையாடல்களை நடத்தவுள்ளதாகவும் தெரியவருகின்றது.

இதேவேளை - நாளை மறுதினம் - கொழும்பில் உள்ளூர் ஆய்வுக் குழுக்களுடனான சந்திப்பு ஒன்றுக்கும் ஓ ப்ரெய்ன் அழைக்கப்பட்டிருக்கிறார்.

### விளையாட்டுப் போட்டி

(வடமராட்சி கிழக்கு)

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி எதிர்வரும் பெப்ரவரி 12ஆம் திகதி நடைபெறவுள்ளது.

### உடுப்பிட்டி முத்துமாரியம்மன் ஆலய புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

உடுப்பிட்டி சமரபாகு கல்லாவத்தை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய புனரமைப் பிற்கான அடிக்கல் நாட்டுவிழா நாளை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஆலய பரிபாலனசபைத் தலைவா எஸ்.ஜெயம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் இந்து கலாச்சார அமைச்சர் தி.மகேஸ்வரன் அடிக்கல்லினை நாட்டுவார். (ச)

# கரம்பனில் இருந்து மீட்கப்பட்ட சடலம் சித்தசுவாதீனமற்ற பெண்ணுடையது

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்துறை கரம்பன் பகுதியிலுள்ள பற்றைக்காணியொன்றில் உருக்குலைந்த நிலையில் மீட்கப்பட்ட சடலம் நேற்று அடையாளம் காணப்பட்டது.

வேலணை மேற்கைச் சேர்ந்த கந்தையா காமாட்சி (வயது 73) என்பவரே பற்றைக்காணிக்குள் சடலமாக மீட்கப்பட்டவர் என இனங்காணப்பட்டது.

நேற்றுமுன்தினம் கரம்பன் பத்திரம்பிட்டி வீதியில் உள்ள பற்றைக் காணி ஒன்றில் இருந்த சடலத்தினை மிருகங்கள் தூக்கிச் செல்வதைச் சீவல் தொழிலாளி ஒருவர் கண்டு தகவல் கொடுத்திருந்தார்.

இதனை அடுத்து - அந்தப்பகுதிக்குச் சென்ற ஊர்காவற்துறைப் பொலிஸார், நீதிவான் பா.சுப்பிரமணியம் ஆகியோர் அங்கு விசாரணைகள் மேற்கொண்டதுடன், சடலம் யாழ். போதனா வைத்தியசாலைப் பிரேத அறையில் அடையாளம் காணும் பொருட்டு வைக்கப்பட்டிருந்தது.

இந்தச் சம்பவம் தொடர்பாகத் தகவல் அளித்த வேலணையைச் சேர்ந்த அரசகேசரி ஐங்கரன், சடலம் இருந்த பகுதியில் மீட்கப்பட்ட சட்டையை அடையாளம் காட்டியதுடன் மேற்படி சடலத்தினைத் தருமாறு கோரியிருந்தார்.

மேற்படி பெண், கடந்த 11 ஆம் திகதி காணாமற்போனதாகவும் இவர் சித்தசுவாதீனமற்றவர் எனவும், இவர் காணாமற்போன சம்பவம் தொடர்பாக ஊர்காவற்றுறைப் பொலிஸாரிடம் கடந்த 13 ஆம் திகதி முறையிடப்பட்டுள்ளதாக ஊர்காவற்றுறைப் பொலிஸார் தெரிவித்தனர். (ச)

# வடமராட்சி கிழக்குக் கடலில் 60 தமிழக மீனவர் பிடிபட்டனர்!

## எச்சரிக்கையின் பின்னர் மறுநாள் விடுவிப்பு

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்குக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித்த அறுபது தமிழக மீனவர்களையும், பத்துப் படகுகளையும் அப்பகுதி கடற்தொழிலாளர்கள் மடக்கிப் பிடித்து, பின்னர் விடுவித்தனர்.

கடந்த வியாழனன்று 60 தமிழக மீனவர்களும் பத்துப் படகுகளில் அத்துமீறி மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது பிடித்து வரப்பட்டு கடற்தொழிலாளர் சமாசத்திடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இவர்களை வெள்ளியன்று காலை 11.30 மணியளவில் வடமராட்சி கிழக்கு, வேம்படி கடற்கரையில் வைத்து சமாசம் விடுதலை செய்தது. இனிவரும் காலங்களில் இலங்கை கடற்பகுதியில் இருந்து 5 கி.மீ. சுற்றாடலுக்குள் மீன் பிடிக்கக்கூடாது என எச்சரித்து, இதனை ஏனைய மீனவர்களுக்கும் கூறும்படியும் வலியுறுத்தி விடுவிக்கப்பட்டனர்.

# லொறி விபத்தில் வியாபாரி காயம்

(யாழ்ப்பாணம்)

இயக்கச்சிப் பகுதியில் லொறியும் மோட்டார் சைக்கிளும் விபத்துக்குள்ளானதில் வியாபாரி ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் மாலை நான்கு மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்தில், மருதங்கேணி வடக்கு தாளையடியைச் சேர்ந்த இராசரத்தினம் ஜெயரட்ணம் சீலன் (வயது 38) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

லொறியும் உழவு இயந்திரம் ஒன்றும் போட்டிக்கு வேகமாக ஓடி வந்தவேளை, மோட்டார் சைக்கிளில் பாரத்துடன் வந்த இந்த வியாபாரி விபத்துக்குள்ளாகியுள்ளார்.

காயமடைந்தவரை அப்பகுதி ஊடாக வந்த செஞ்சிலுவைச் சங்கத்தின் வாகனத்தில் ஏற்றி போதனா வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர். (ச)

## நெல்லியடியில் நாய்களுக்கு தடுப்பூசி

நெல்லியடி பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவுக்கு உட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு, நாளை 28 ஆம் திகதி காலை 9 மணியிலிருந்து 11 மணிவரை நெல்லியடி சனசமூக நிலையத்திலும், காலை 11.30 முதல் 12.30 மணிவரை நெல்லியடி முடக்காடு சனசமூக நிலையத்திலும், 1.30 முதல் 3.30 வரை தச்சை ஐங்கரன் சனசமூக நிலையத்திலும் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளதாக நெல்லியடி பொதுச் சுகாதார பரிசோதகர் க. இளங்கோ தெரிவித்தார்.

# மட்டுவிலில் வயல்நிலத்தில் மண் அகழ்ந்த ஆறு உழவு இயந்திரங்கள் தடுத்து வைப்பு!

(யாழ்ப்பாணம்)

மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோவிலுக்கு அண்மையில் அமைந்துள்ள வயல்நிலங்களில் சட்டவிரோதமாக மணல் ஏற்றிய ஆறு உழவு இயந்திரங்கள், சுற்றுச் சூழல் பாதுகாப்புச் சங்கத்தினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

குடாநாட்டில் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் துரிதமாக நடைபெற்று வருகின்றது. இதனால் மண்ணுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது. மண் அள்ளுவதற்கு அனுமதிக்கும் நடைமுறை இருந்து வருவதனால் தனியார் நிலங்கள், பொது இடங்களில் சட்டவிரோதமாக மண் அகழும் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன.

மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோவிலுக்கு அண்மையிலுள்ள வயல் நிலங்களிலும் உழவு இயந்திரங்களில் மண் ஏற்றப்படுகின்றது. இது தொடர்பாக அந்தப்பகுதி மக்களும் காணி உரிமையாளரும் சூழல் பாதுகாப்புக் குழுவினரிடம் முறையிட்டிருந்தனர்.

இதனையடுத்து கடந்த வெள்ளிக்கிழமை கோவிலுக்கு அண்மையிலுள்ள வயல்நிலத்தில் மண் அகழ்ந்து கொண்டிருந்தவேளை,

சூழல் பாதுகாப்புக் குழுவினரால் ஆறு உழவு இயந்திரங்கள் மடக்கிப் பிடிக்கப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. (ச)

## சங்கானையில் கிராம அபிவிருத்தி சங்கம்

(சங்கானை)

சங்கானை மத்தியில் கிராம அபிவிருத்திச் சங்கம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. இச்சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் இப்பகுதிக் கிராமஅலுவலர் திருமதி கே.லலிதாம்பாள் தலைமையில் இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் சிறப்பு ஆலோசகராகக் கலந்து கொண்ட கிராம அபிவிருத்திச் சங்க அதிகாரி, கிராம அபிவிருத்திச் சங்கத்தின் பணிகள் மற்றும் உபவிதி பற்றியும் விரிவாக விளக்கியதோடு, கிராம மக்கள் மத்தியிலான ஐக்கியத்தையும் வலியுறுத்தினார்.

இந்நிகழ்வில் கிராம அபிவிருத்திச் சங்க நிர்வாகிகளாக பதின்மூன்று உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டார்கள். (க)

## இறைச்சிக்காக விலங்குகளை வெட்டுவதற்கு முன்னர் மக்கள் பார்வைக்கு!

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட இறைச்சிக் கடைகளில், விலங்குகளை வெட்டுவதற்குப் புதிய நடைமுறை அமுல்படுத்தப்பட்டுள்ளது.

பிரதேச சபைகளின் அனுமதியைப் பெற்ற இறைச்சிக்கடைகளில் விலங்குகளை வெட்டுவதற்க்கு 24 மணிநேரம் முன்னதாகவே, பொது மக்கள் பார்வைக்கு அவற்றைக் கட்டி வைக்க வேண்டுமெனவும் - கொல்களங்கள் உரியமுறைப்படி இயங்க வைக்கப்பட வேண்டும் எனவும், பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரியால் வடமராட்சி பிரதேச சபைகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இவ்விதிமுறையை மீறும் கடை உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

இதேவேளை- துன்னாலைப் பகுதியில் இறைச்சிக்காக விலங்குகளை வெட்டியபின் கழிவுகள் பொது இடங்களில் புதைக்கப்படுவதால் துர்நாற்றம் வீசுவதாகப் பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது குறித்து பிரதேச சபை மூலமாக பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டபோதும் எதுவித நடவடிக்கையையும் பொலிஸார் மேற்கொள்ளவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (15)

# நீரிழிவு நோய் DIABETES

பகுதி 1

- ச. ஆ. கோபாலமூர்த்தி.

**இலங்கையில் நீரிழிவு நோயினால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை கணிசமானளவு அதிகரித்திருக்கிறது. இந்நிலையில், நீரிழிவுநோய் பற்றிய விழிப்புணர்வையும், விளக்கத்தையும், தடுப்பு நடவடிக்கைகளையும் மக்களுக்குக் கொண்டு செல்வதற்காக இத்தொடர் ஒவ்வொரு நாளுமாக இன்று முதல் பிரசுரமாகின்றது.**

நீரிழிவு, மனிதர் எச்சரிக்கையடையத்தக்க அறிகுறிகள் எதையும் காட்டாமலே, மனித உடலில் மறைந்து நின்றும் பாதிப்பை ஏற்படுத்தும் நோய் (INSIDIOUS DISEASE) ஆகும்.

இந்த நோயின் அறிகுறிகள் வெளித்தோன்றுவதற்கு வெகு காலததிற்கு முன்பே, இந்த நோய ஏற்பட்டுப் பல்வேறு பாதிப்புக்களை ஏற்படுத்தியிருக்கவும் கூடும்.

இந்த நோயின் தொடர்நோய்ச் சிக்கல்களாக இருதய நோய், உயர் இரத்த அழுத்தம், சிறுநீரகப் பாதிப்பு, விழித்திரைப் பாதிப்பு, நரம்புகள் பாதிப்பு போன்றவை ஏற்படுகின்றன.

இந்த நோய் பற்றிப் போதிய அறிவு இல்லாத நிலை, இன்றும் நிலவுவதால் பலர் பெரும் பாதிப்புக்கு உள்ளான பின்னரே இந்த நோய் தமக்கு ஏற்பட்டிருப்பதை உணர்கின்றனர்.

இது ஓர் பரம்பரைச் செல்வாக்குடைய நோயாகும். பரம்பரைக் காரணி அல்லாது வேறு காரணிகளாலும் இந்த நோய் தோன்றலாம். இன்று மனிதரின் வாழ்க்கை முறை மாறுதலடைந்து இந்தநோய் ஏற்பட வழிவகுப்பதால், இதனை வாழ்க்கை முறை மாற்றநோய் எனவும் குறிப்பிடுகிறார்கள்.

உலகில் இந்தநோய் பல்கிப் பெருகி வருவதால் ஒவ்வொருவரும் இந்த நோயின் பாதிப்புக்களிலிருந்து தம்மைத் தற்காத்துக் கொள்ள, இதனைப்பற்றி நன்கு அறிந்திருத்தல் அவசியமாகும்.

இன்றைய இளைஞர்கள் சிலர் போதைப்பொருளுக்கும், புகை, மது போன்றவற்றிற்கும் அடிமையாகியுள்ளனர். ஆனால், இளவயதினர் பலர் இனிப்பு மிகுந்த மென்பானங்களுக்கு அடிமையாகியுள்ளனர். அன்று நகரவாசிகளையும் முதியோரையும் தனவந்தர்களையுமே நீரிழிவு பாதிப்பதாகக் கருதப்பட்டது.

இன்று, இந்நோய் வயது, பால், ஏழை, பணக்காரன், நகரவாசி, கிராமவாசி என்ற பேதமின்றி அனை வரையும் பாதிக்கிறது என அறியப்பட்டுள்ளது. இலங்கையின் சனத்தொகையில் 10% அதிகமானோர் இந்த நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. உடலின் சிறுபாகமான சதையிலுள்ள B கலங்கள் கெடுவதாலும், B கலங்களால் சுரக்கப்படும் இன்சுலின் சில காரணங்களால் உயிர்ப்பாகச் செயற்படமுடியாது போவதாலும் இன்சுலின் போதாமை ஏற்பட்டு இந்த நோய் ஏற்படுகிறது. இந்த நோய் நேரடியாக ஏற்படும் நீரிழிவாகவும் (PRIMARY DIABETES) வேறு காரணிகளால் ஏற்படுத்தப்படும் நீரிழிவாகவும் (SECONDARY DIABETES) ஏற்படும்.

வைத்தியர்கள் இந்த நோயை, இன்சுலின் ஏற்படுத்தியே கட்டுப்படுத்த வேண்டிய முதலாம் வகை (TYPE 1) நீரிழிவு (INSULIN DEPENDENT DIABETES MELLITUS-IDDM) எனவும், இன்சுலின் ஏற்றாமலும் கட்டுப்படுத்தக் கூடிய 2 ஆம் வகை (TYPE 2) நீரிழிவு (NON INSULIN DEPENDENT DIABETES MELLITUS - NIDDM) எனவும் இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கின்றனர். (SECONDARY DIABETES) வேறு காரணிகளால் ஏற்படுத்தப்படும் நீரிழிவு பல்வேறு பிரிவுகளாகப் பிரித்து நோக்கப்படுகிறது. இந்த நோய் மேலும் பல சிறு பிரிவுகளாக்கி நோக்கப்படுகிறது அவையாவன,

(1) சிறுவர் நீரிழிவு (JUVENILE DIABETES MELLITUS)
(2) கர்ப்பகால நீரிழிவு (GESTATION DIABETES MELLITUS)
(3) போஷாக்கின்மை தொடர்பான நீரிழிவு (MALNUTRITION RELATED DIABETES MELLITUS)
(4) சதையிக்கல் நீரிழிவு (FIBRO CALCULOSE DIABETES MELLITUS)
(5) இன்சுலின் எதிர்ப்பு நீரிழிவு (INSULIN RESISTANT ANTAGONIST DIABETES MELLITUS)
(6) மருந்துகள் தோற்றுவித்த நீரிழிவு (DRUG INDUCED IATROGENIC DIABETES MELLITUS)
(7) மன உளைச்சல் தோற்றுவித்த நீரிழிவு (STRESS INDUCED DIABETES MELLITUS)
(8) ஈரல் நோய் தோற்றுவித்த நீரிழிவு (LIVER DISEASE RELATED D.M.)
(9) அதிரினல், தைரொயிட் வளர்ச்சி ஹோமோன்களினால் தோற்றுவிக்கப்பட்ட நீரிழிவு.

நீரிழிவு நோய்க்கு வேறு பல காரணப் பெயர்களும் உண்டு. இந்த நோயின் முக்கிய தோற்றப்பாடாக, அதிக சிறுநீர் (சலம்) வெளியேறுவதால் இது சலரோகம் எனவும், இன்சுலின் குறைவால் ஏற்படும் நோய் என்பதைக் குறித்துரைக்கும் வகையில், இன்சுலின் குறைவு நோய் (HYPO INSULINISM) எனவும், சிறுநீருடன் சர்க்கரை வெளியேறுவதைச் சுட்டும் வகையில் சர்க்கரை நோய் எனவும் அழைக்கப்படுகிறது.

நீரிழிவு நோயின் அறிகுறிகள்

1. உணவுச் சமிபாடு சீராக இருக்கும்போது உடல் மெலிதல், எடை குறைதல்
2. அடிக்கடி சிறுநீர் கழிதல்.
3. இரவு 10 மணிக்குச் சலம் கழித்துவிட்டு நித்திரை செய்யும்போது சலம் கழிக்க வேண்டும் என்ற உணர்ச்சி ஒரு தடவையோ பல தடவையோ ஏற்படல்.
4. சலத்தில் எறும்பு மொய்த்தல்.
5. அடிக்கடி சிறநீர்க்கானில் (UTI) தொற்று ஏற்படல்.
6. ஆண், பெண்ணுறுப்புப் பகுதிகளில் சொறிவு, வெடிப்பு ஏற்படல்.
7. உடம்பில் தோல் நோய்கள் எதுவும் இல்லாநிலையில், சொறிவு ஏற்படல்.
8. புண்கள் மாறாது நீடித்தல்.
9. கை, கால் மூட்டுக்களை அசைக்கும்போது நோவு ஏற்படல்.
10. சாப்பிட்ட பின்பும் பசி அடங்காதிருத்தல்.
11. பலவீனம், அசதி, சோர்வு, மயக்கம், சோம்பல், தலைச்சுற்று போன்றவை வேறு நோயில்லாதோருக்கு ஏற்படல்.
12. அதிக பசி, அதிக தாகம் ஏற்படல்.
13. வாய், தொண்டை உலர்தல்.
14. கால்கள், கைவிரல்கள், விரல் இறைகள், வாய், காது, ஜனன உறுப்புகளில் பங்கசுக்கள் (காளான்) வளர்ந்து சொறிவு, எரிவு, புண் போன்றவை தோன்றுதல்.
15. நீடித்த தலையிடி, தலையம்மல் ஏற்படல்.
16. நித்திரை குறைதல்.
17. சுவாசத்தில் நறுமணம் காலல்.
18. எளிதில் கோபம் ஏற்படல்.
19. பார்வை மங்குதல், இளமையிலேயே ஒளிபுகாவில்லை நோய் (CATARACT) ஏற்படுதல், விழித்திரை சேதமடைதல்.
20. உடம்பு உழைவு, உடம்பு எரிவு ஏற்படல்.
21. அவயவங்களில் குறிப்பாகக் கால்களில் உறுத்துணர்ச்சி அற்றுப்போதல் (மரத்துப்போதல்).
22. பின் கழுத்து, முதுகு, கமக்கட்டு, பவுந்திரம் போன்ற இடங்களில் பெரிய பருக்கள் அல்லது கட்டுகள் தோன்றுதல்.
23. அடிக்கடி முரசு அழற்சி நோய் தோன்றல்.
24. காதிலிருந்து சீழ், ஊனம் போன்றவை வெளிவருதல்.
25. சத்திரசிகிச்சைப் புண்கள் மாறாது நீடித்தல்.

இக்குணங்குறிகள் இருந்தால் நீரிழிவு நோயாளி எனக் கூறமுடியாது. சந்தேகிக்கலாம். இரத்தப் பரிசோதனை மூலமே நீரிழிவு நோயாளி இனங்காணப்படுவர்.

(தொடரும்)

# பரம்பரை

எங்களை போலத்தான் அப்பனும்
கூலி வேலை செய்தான்
எட்டாம் வகுப்பு வரை எட்டிப்
பார்க்க வைத்தான்
என்னவும் அவன் மனதில் ஏக்கம்
கிடவாது
எப்பவும் இப்படித்தான்!
என்ற எண்ணமுடன்
படுத்து எழுந்திடுவான்
பாட்டடி அடித்திடுவான்
அவன் ~ கொஞ்சம்
எங்களைப் படிக்க விட்ட
கேவலந்தான் ~ சற்றே
சிந்திக்கின்றோம்
எப்பவும் இப்படித்தானா? என்றே
ஏங்குகின்றோம்
அப்பன் ஒருநாள் சாவரும் என்பதற்காய்
இத்தனை நாளும் வாழ்ந்தான்
ஒரு நாள் செத்தும் போனான்
நாங்கள் ~
ஒரு நாள் ~ வாழ்வு வரும் என்பதற்காய்
நிதமும் செத்துக் கொண்டிருக்கின்றோம்.



நீர்வையூர் பராபரன்

# A-9 னை நீளும் நினைவுகள்

பகுதி பதினாறு

உணவு, நீர், ரவை கோட்டையுள் தீர்ந்ததால்
உதவவே பொதி போடும் விமானங்கள்.
அணிவகுத்தைந்து ஆறாய்..... வெருட்டின
சகடை, புக்காரா, அவ்ரோ இத்யாதிகள்.
உணவைப் போட்ட கையோடு 'மலத்தையும்'
ஊரில் போட்டன வம்பு வல்லூறுகள்.
நினைக்க இன்றும் நடுங்கும்; இரவெல்லாம்
நீந்தினோம்...... துயர் என்னும் கடலினுள்.

முன்பு பேருந்து வண்டித் தரிப்பிடம்
முழித்திருந்திடும்..... யாழ். நகர் மத்தியில்.
பின் நகரிலே 'பிரமை' பிடித்ததால்
பேர்ந்து போனது 'முத்திரைச் சந்தியில்'!
சின்ன யாழ். நகர் அங்குருவாயிற்று.
செறிந்திருந்த கடைகள், சனநரல்,
மண்ணெண்ணை உண்ட வாகனம், என்றொரு
'வாசம்' புதிதாக நல்லூரில் வீசிற்று.

கண்டி வீதியால் கொழும்புக்கு போயிட
கடினக் கொம்படிப் பாதை கடந்திடும்
வண்டி யாவுமே முத்திரைச்சந்தியில்
இருந்து தானே கிளம்பின..... யாழ்ப்பாண
மண்ணை வீட்டுப் பெயர அனுமதி
வழங்கும் மையம் இரவு பகலெல்லாம்
கண் விழித்தது; கரிய இருளை.... 'ஜாம்
போத்தல்' விளக்கு கலைத்துக் குடித்தது.




- ஜெயங்கொண்டான்

# குற்றம்

அறுந்து விட்ட
செருப்பு -
அவனைப்
பார்த்துச் சொன்னது
"அறுத்துவிட்டாயே"

பல்லவன்




# பூரணி இலக்கிய சஞ்சிகை




ஈழத்தில் சிற்றிலக்கிய ஏடுகள் நவீன இலக்கியத்துக்கு ஆரோக்கியமான பங்களிப்பைச் செய்துள்ளன. பல தரமான, காத்திரமான படைப்புக்களை அவ்வப்போது தந்து, ஈழத்து நவீன இலக்கியத்தின் வளர்ச்சிக்கு உரமூட்டி வந்துள்ளன. ஆனால் பொருளாதாரநிலை, வாசகர்கள் பரம்பல் ஆகியவற்றைத் தேட முடியாததால், இந்தச் சஞ்சிகைகள் அரைகுறையில் மடிந்து போயுள்ளன. இதை எதிர்த்துப் போராட இந்த சிற்றிலக்கிய வரிசையில் "பூரணி" என்ற இலக்கியச் சஞ்சிகை வெளிவந்துள்ளது. சிற்றிலக்கிய ஏடுகளின் தரத்தையும் பேணும் வகையில் இந்த சஞ்சிகையில் உள்ள ஆக்கங்கள் ஆக்கபூர்வமாக அமைந்துள்ளன.




இந்தச் சஞ்சிகையில் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், படைப்பாளிகள் ஆகியோரின் ஆக்கங்கள் அணிசெய்துள்ளன.

அருட்கவி சீ. விநாயகமூர்த்தி, பிரம்மஸ்ரீ வீரமணி ஐயர், பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை, கலாநிதி தி.கமலநாதன், க.சிவராமலிங்கம், கலாநிதி க. சொக்கலிங்கம் ஆகியோரின் வாழ்த்துக்களுடன் இச்சஞ்சிகை மலர்ந்துள்ளது.

மறைந்துபோன நாகரிகம் என்ற தலைப்பில் பேராசிரியர் சண்முகதாஸ் சிந்து வெளிநாகரிகத்தின் தொன்மையும், சிறப்பையும் தனது கட்டுரை மூலம் விளக்கியுள்ளார்.

பேராசிரியர் கலாநிதி என்.ஜெபநேசன் தமிழ் இலக்கிய வரலாற்றில் பத்தொன்பதாம் நூற்றாண்டு பற்றியும், அதில் மேல்நாட்டில் இருந்து வந்த அறிஞர்களால் எப்படிப் போற்றிப் புகழப் பட்டது என்று குறிப்பிட்டுள்ளார்.

'யாழ்ப்பாணத்துக் கல்வி மரபில் இராமாயணம்' என்ற தலைப்பில் கலாநிதி சிவலிங்கராசாவும், யாழ்ப்பாணக் கல்விமரபுடன் நீண்ட நெடுங்காலமாக இரண்டறக்கலந்து வந்த இராமாயணக்கல்வி இன்னும் ஆறாத்தொடர்ச்சியில் பேணப்பட்டு வருகின்றது என்பதை தனது ஆய்வுரை மூலம் வெளிப்படுத்தி இருக்கின்றார்.

'புலம்பெயர் காரணிகளும், புலம் பெயர்ந்தோர் எதிர்நோக்கும் சவால்களும்' என்ற தலைப்பில் கலாநிதி காரை சுந்தரம்பிள்ளையும், 'கனடாவில் யாழ்ப்பாணத்து வாழ்வியல்புகள்' என்ற தலைப்பில் செல்லப்பா நடராசாவின் கட்டுரையும், புலம்பெயர்ந்த மக்களின் வாழ்வு நிலை பற்றி எடுத்தியம்புகின்றன.

யாழ்.பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த கலாநிதி சண்முகலிங்கம் தொலைகாட்சி, வீடியோ என்பவற்றால் சமூகத்தில் ஏற்படும் பாதிப்புக்கள், பலாபன்கள் பற்றி தரவுகள் கொண்டு விளக்கியிருக்கியிருந்தார்.

'விடைபெறும் கலாசார விழுமியம்' என்ற பொருளில் கோ.சி. வேலாயுதமும் மற்றும் திருக்குமரன், ப.மகேந்திரதாசன், பண்டிதர் த.ஜெயசீலன் ஆகியோரின் கவிதைகளும் தங்கம்மா அப்பாக்குட்டியின் பேட்டியும் இடம் பெற்றுள்ளன.

இந்த ஆக்கபூர்வமான சஞ்சிகை, மாத, காலாண்டு அல்லது அவ்வப்போது வெளிவரும் சஞ்சிகையா? என்பதைக் குறிப்பிடவில்லை. குறுகிய இடைவெளிகளில் வெளிவந்தால் நிச்சயம் ஈழத்து நவீன இலக்கியத்துக்கு வரப்பிரசாதமாக அமையும்.

மணிசேகரன்

# எழுத்தாளர் சிற்பிக்கு ஆளுநர் விருது

மூத்த தமிழ் எழுத்தாளரும், வைத்தீஸ்வராக் கல்லூரியின் முன்னை நாள் அதிபருமான சி.சிவசரவணபவன் (சிற்பி) அவர்களுக்கு, வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி, பண்பாட்டலு



வல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் அதி உயர்ந்த விருதான ஆளுநர் விருது வழங்கப் பட்டுள்ளது.

கந்தரோடையைச் சேர்ந்த இவர், கடந்த ஐம்பது ஆண்டுகளாகக் கலை, இலக்கியம், கல்வி, சஞ்சிகை வெளியீடு போன்ற துறைகளிலே குறிப்பிடத்தக்க சாதனைகளை ஆற்றி வருகின்றார். பன்னிரண்டு எழுத்தாளர்களின் சிறந்த சிறுகதைகளைத் தொகுத்து "ஈழத்துச் சிறுகதைகள்" என்ற தொகுதியை 1958ஆம் ஆண்டிலேயே வெளியிட்டு, இந்நாட்டு எழுத்தாளர்களின் திறமையை வெளியுலகிற்கு எடுத்துக்காட்டிய இவர், "கலைச்செல்வி" என்ற சஞ்சிகையின் ஆசிரியராக இருந்து, ஈழத்து நவீன இலக்கிய வளர்ச்சிக்குக் குறிப்பிடத்தக்க பங்களிப்பினைச் செய்துள்ளார். இன்று பிரபலமான எழுத்தாளர்களாகத் திகழ்பவர்களுட் பெரும்பாலானவர்கள் "கலைச் செல்விப் பண்ணையில்" இவரால் வளர்க்கப்பட்டவர்களே. சுதந்திரன், ஈழகேசரி, வீரகேசரி, தினகரன், சிந்தாமணி, ஈழமுரசு, முரசொலி, ஈழநாதம், உதயன், கலைக்கண், அறிவுக்களஞ்சியம், அல்லி, வளர்மதி, மறுமலர்ச்சி, மல்லிகை, நமது ஈழநாடு முதலிய இலங்கைப் பத்திரிகைகளிலும் கலைமகள, கல்கி, மஞ்சரி, தீபம், புதுமை முதலிய தென்னிந்தியப் பத்திரிகைகளிலும் இவருடைய சிறுகதைகள், கட்டுரைகள், கவிதைகள் என்பன வெளிவந்துள்ளன.

பிரபல எழுத்தாளர் நா.பார்த்தசாரதி (மணிவண்ணன்) அவர்களை ஆசிரியராகக் கொண்டு சென்னையிலிருந்து வெளிவந்த "தீபம்" என்ற கலை, இலக்கியச் சஞ்சிகையில் "யாழ்வாசி" என்ற புனைபெயரில் மாதந்தோறும் இவர் எழுதிய "இலங்கைக் கடிதம்" மூலம் ஈழத்துக் கலை இலக்கிய முயற்சிகளைத் தமிழ்நாட்டினருக்கு அறிமுகம் செய்தார்.

ஐம்பதுகளில் கொழும்பிலிருந்து வெளியான "உதயம்" நடத்திய அகில இலங்கைச் சிறுகதைப் போட்டியில் இவர் எழுதிய "மறுமணம்" முதற்பரிசைப் பெற்றது. சென்னை வாசகர் வட்டம் நடத்திய விமர்சனப் போட்டியில் முதலாம் பரிசையும், சென்னை திருவல்லிக்கேணி ஔவை தமிழ்ச்சங்கம் நடத்திய கட்டுரைப் போட்டியில் இரண்டாம் பரிசையும் இவர் பெற்றார்.

தமிழீழக் கல்வி மேம்பாட்டுப்பேரவை, ஆசிரியவாண்மை விருத்திக்காக வெளியிட்ட "விளக்கு" சஞ்சிகையின் ஆசிரியராக இருந்து, அச்சஞ்சிகை சிறப்பாக வெளிவர உழைத்தார்.

இவர் எழுதிய "உனக்காகக் கண்ணே" என்ற நாவலும், "நிலவும் நினைவும்", "சத்திய தரிசனம்" ஆகிய சிறுகதைத் தொகுதிகளும் இதுவரை நூலுருப் பெற்றுள்ளன.

கடந்த டிசம்பர் மாத இறுதியில் வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு-திருகோணமலை புனித சூசையப்பர் கல்லூரியில் நடத்திய தமிழ் இலக்கியப் பெருவிழாவின் இறுதி நாளன்று ஆளுநர் விருது இவருக்கு வழங்கப்பட்டது.

எஸ்.எஸ்.குமார்

# சிதைவு

## சிறுகதை

### ச.குமுதினி

சாப்பிடுவதற்காக அவனது மணையை எடுத்த வைத்த பொழுதிலேயே அவள் முகத்திலிருந்து அவனுக்குப் புரிந்துபோயிற்று. மஞ்சளாயிருந்த முகம் வெலவெலத்து அவள் அழுதிருக்கவும் கூடும் என எண்ண வைத்தது.

அவன் மௌனமாய் மணையில் அமர்ந்தான். வீட்டிற்கு வரும்போது மிகப் பசித்ததாய் ஞாபகமிருந்தது. வாந்தியின் பின்னான பசியின்மை போன்ற உணர்வெழுந்து அவள் தட்டத்தில் சோறிடும்போது,

எங்கிருந்து தொடங்குவது வார்த்தைகளை என்பதை மறந்து போனவன்போலச் சோற்றுப் பருக்கைகளைக் கலைத்துக் கொண்டிருந்தான்.

முற்றத்தில் 'இளையதுகள்' மூன்றும் விளையாடியோ, சண்டை பிடித்தோ சத்தமிட்டுக் கொண்டிருந்தன. மூத்தவன் பள்ளியால் திரும்ப நேரமிருக்கிறது.

"காலமை கிளினிக்குப் போனனான்..."

".....".

"சலம் சோதிச்சுப் பாத்தவை..."

"என்னவாம்..." உயிரற்றதான குரலுடன் அவளை நோக்கினான், தெரிந்துபோன பதிலுக்காய்.

"ஏழாவது கிழமை எண்டு மிஸ்ஸி சொன்னா..." கண்ணீர் குரலிலுமிருந்தது தளர்ந்து போனவளாய் சுவரோடு மடிந்து அமர்ந்தாள்.

"பேசினவ... இனிக் கவலைப்பட்டு என்ன செய்யிறதெண்டு..."

"ம்...ம்...இனி என்னத்தைச் செய்யிறது...? " விரக்தி தெறித்தது.

"என்னப்பா.... நீங்களும் உப்பிடிச் சொல்லுறியள்? " "அவள் அழுகை கேவல்களுடன் தொடர்ந்தது.

அவனுக்குப் பழைய நாட்கள் நினைவிலோடின. எட்டு வருடங்கள் இருக்கும் அன்றொரு நாளிலும் அவன் சாப்பிட அமர்ந்த போதுதான் அவன் தந்தையாகப் போவதாய் அவள் சொன்னாள். அப்போது அவள் கன்னங்கள் செம்மஞ்சளாகியிருந்தன. விழிகளின் பளபளப்பில் புத்தொளி பிரகாசித்தது. சந்தோஷம் பூக்களாகி அவர்களைத் தழுவிற்று.

"இப்பவே அரை வயிறும் கால் வயிறும்... வருத்தமெண்டு மருந்து வாங்கக்கூட கடனுக்குப் போக வேண்டியிருக்கு..."

"எனக்கும் விளங்குதப்பா... ஆனா வேறை என்னத்தைச் செய்யுறது? நெஞ்சுள் முள்ளாய் வேதனை நெருடிற்று அவனுள். வெள்ளி மீன்கள் அவனது வள்ளத்துள் நிறைந்திருந்த அந்தக் காலங்கள்போல எனின், அவனால் எவ்வளவு இதமாய்த் தன் குழந்தைகளையும் மனைவியையும் காப்பாற்ற முடிந்திருக்கும். குழந்தைகள் என்றால் அவளுக்கும் எத்துணை ஆர்வம்!

அவளது அழுகை தொடர்ந்து கொண்டிருந்தது. மெல்ல அவன் தலைகோதி அவளை அமைதிப் படுத்த வேண்டும் போலிருந்த எண்ணம் தவிர்த்து உறைந்திருந்தான். அவனது காயங்களை அவளுமாய் அழுது பகிர்ந்து கொண்ட கணங்களை யார் தவறெனக் கொள்ளமுடியும்? எல்லாம் வரண்டு போயிருந்த பாதையில் நெகிழ்வு நிறைந்து இதயம் பகிர்கின்ற ஆதரவையும் தவிர்த்து விட்டிருக்க வேண்டுமோ?

"அழாதையும் சாந்தி... அதுகள் விளையாடுதுகள்...." அவள் மெல்லத் தணிந்தாள். இறுகி இறுகித் தவித்த மௌனம் இருவரிடமும் பேசிற்று. சிலபொழுது பிறகு அவளே கலைத்தாள்.

"இந்த மழைக்கு சின்னன் ரெண்டுக்கும் போர்வை வாங்கோணும் எண்டு எவ்வளவு நாளா யோசிக்கிறம்...? இதுகளாவது பரவாயில்லை.... கஞ்சியோ, சோறோ சாப்பிடுகிற வயது வந்திட்டுது... இனிப் பிறக்கிறதுக்கு பால்மா, மருந்து, துணிமணி .... என்னப்பா செய்யப்போறம் நாங்கள்..? குரலில் படர்ந்திருந்த அச்சம் எல்லாத் துன்பங்களிலும் சாற்றைப் பிழிந்து கண்ணீருள் வலை பின்னிற்று.

"நானும் எல்லாத்தையும் யோசிச்சிட்டன் சாந்தி... நேற்றிரவு நான் ஒரு நிமிஷங்கூட நித்திரை கொள்ளேல்லை... கொஞ்சம் வித்தியாசமாய்க் கிடக்கு எண்டு நீர் சொல்லேக்கையே யோசினை தொடங்கீட்டுதப்பா..ஆனா இனி என்னத்தையப்பா செய்யிறது... வாறதை ஏற்றுக்கொள்ள வேண்டியதுதான்..."

"உங்களால என்னையும் பாக்க ஏலேது குழந்தையளோட... அம்மா இருந்திருந்தாலாவது..." அவள் இருந்திருந்தால் அவள் தாங்கிக் கொள்வாள். துணையாய் இருப்பாள் அவளோடு, இப்போதும் துணை தான் தோன்றாத்துணை. அழுகையை இறுக்கிமூட உதட்டோரங்களூடு விம்மல் கசிந்தது.

"நான் மிஸ்ஸியிட்டைக் கேட்டனான்..."

"என்னெண்டு..."

"சரியான கஷ்டம்... பிறந்தாலும் வளக்க வழியில்லை. கரைச்சு விடுவியளோ.. எண்டு..."

"என்ன சாந்தி சொல்லுறீ...."? அவனில் திடுக்கிடல் தெளிவாய்த் தெரிந்தது.

"ஓமப்பா.... எனக்கு வேற வழி தெரியல்ல... பெத்தது நாலையும் உங்களையும் இன்னும் வதைச்சுக் கொண்டு வாறதையும் வளக்க ஏலாம திண்டாடுறதை விட இப்படிச் செய்யிறது பிழையில்லை எண்டு தீர்மானிச்சுத்தான் கேட்டனான்...."

"ஏழு கிழமையென்றாலும் அது ஒரு குழந்தையப்பா...."

எனக்கு குழந்தையென்றா உயிரென்று தெரியும்தானே உங்களுக்கு. பிறந்த பிறகு தினமும் வறுமையால் சாகுறதைவிட ஒன்றையும் உணராத இந்நிலையிலேயே அது போகட்டும் எண்டு நான் தீர்மானிச்சிட்டேன். ஆனா மிஸ்ஸி சொன்னவா இஞ்ச சட்டப்படி செய்யிறேல்லையாம்..."

"..........."

"நான் பார்வதி அக்காட்டையும் கேட்டனான். அவ தனக்கு ஆளைத் தெரியுமெண்டு சொன்னவா...."

"..........."

"இன்னும் நாள் போனாச் செய்யிற கஷ்டமாம்..... இண்டைக்கெண்டாலும் வரச் சொன்னனான்.....தான் கூட்டிக்கொண்டு போறெனெண்டு...."



"அப்படிச் செய்யிறதாலே உம்மட உயிருக்கு பயமப்பா........"

அவன் மெல்ல எழுந்து வந்தான். அவன் முன்னே அமர்ந்து தீர்மானமான குரலில் புதுவரவைத் தடுப்பதன் அவசியம் பற்றிச் சொல்லத் தொடங்கினாள். அவனது ஒவ்வொரு சொல்லிலும் நிதர்சனத்தின் கனம் செறிந்தடர்ந்திருப்பது அவனுக்குப் புரிந்தது.

பார்வதிக்கும் ஒரு சிறுதொகையைக் கொடுக்க வேண்டியிருந்த போதே, அவனுக்குப் பார்வதியின் 'அக்கறை' பற்றிப் புரிந்து போனது. அவள் அநேக விடயங்களைத் தெரிந்தவள் போலிருந்தாள். சட்டத்தின் கையில் குற்றவாளி ஆகாதிருப்பது பற்றியும் எத்துணை திறமையாய் - தான் குறிப்பிட்ட நபர் 'காரியத்தை' செய்வார் என்பது பற்றியும் அவள் அடிக்கடி சொல்லிய வண்ணமிருந்தாள்.

அவனுள் இனந்தெரியாத அச்சம் நிறைந்திருந்தது. சாந்தியின் முகத்தில் பார்வதியின் சொற்கள் மீதான திடம் மாற்ற முடியாததாய் தோன்றிற்று. பார்வதியும் பெண் தானே. சாந்திக்கு ஆபத்தான ஒன்றை இத்துணை நிச்சயமாய் அவள் சொல்லியிருக்கமாட்டாள். அவன் தன்னுள் பிரார்த்திக் கொண்டான். இந்தத் தடவை எந்தப் பிரச்சினையும் இல்லாமல் இருந்து விடட்டும். இனிமேல் அவன் எச்சரிக்கையாய் இருந்து கொள்வான்.

அவசர சிகிச்சைப் பிரிவின் தீவிர அமைதி அவனை அச்சமூட்டிற்று. கண்கள் நீரை நிரந்தரமாய் உற்பவித்துக் கொண்டிருந்தன. வைத்திய நிபுணரின் கேள்விகளுக்கு விடையளிக்க அவனால் வார்த்தைகளைக் கோர்க்கமுடியவில்லை.

தூரே சாந்தியின் சோர்ந்து தளர்ந்த தோற்றம் அவளைச் சுற்றிலுமிருந்த கருவிகளினூடு தெரிந்தது. அவனது உலகம், அவனது துயரம் கண்டாவது அவள் முன்னைப்போல எழும்பி வரமாட்டாளா? வைத்திய நிபுணரின் கேள்வி அவனை நிஜத்திற்கு இழுத்தது.

"எத்தினை நாள் இப்ப?"

"ஆறுநாள் ஐயா இண்டைக்கு..."

"அறிவு மயங்கு மட்டும் அவ ஆபத்தில இருக்கிறா எண்டு நீங்கள் நினைக்கேல்லையே தம்பி...."

"செய்த அண்டு உடன மயங்கிப்போனா.... பிறகு மயக்கம் தெளிஞ்ச பிறகும் ஒரே வலியும், இரத்தப்போக்கும் எண்டு துடிச்சுக் கொண்டிருந்தவள் அந்த மனுசி ஏதோ குளிசையைக் குடுக்க பிறகு நித்திரையாய்ப் போனாள்

ஐயா.... இரண்டாம் நாள் மெல்லிய காய்ச்சல் தொடங்கினது....

கொஞ்சம் கொஞ்சமாக் காய்ச்சல் கூடவும், அது பயப்பிடத் தேவையில்லை எண்டு அந்த மனுசி ஆஸ்பத்திரிக்கு விடாம மறிச்சுப் போட்டா...." வைத்திய நிபுணரின் பார்வையில் தெரிந்த உணர்ச்சியை அவனால் அனுமானிக்க முடியவில்லை.

"ஏன் மறிச்சவ.....?"

"காய்ச்சல் வந்து மாறும். ஆஸ்பத்திரிக்குப் போனா பொலிஸ கேஸ் எண்டு சொன்னதால் சாந்தியும் வரமாட்டனெண்டுட்டாள். அவளுக்குப் பயம் ஐயா... எனக்குப் பிரச்சினையாய்ப் போகும் எண்டு...." அவன் அழுது கொண்டிருந்தான்.

"இப்பிடிக் குழந்தையைக் கலைக்கிறது தாய்க்கு ஆபத்தெண்டு தெரியாதே...?"

"இல்லை ஐயா, எனக்குத் தெரிஞ்சிருந்தா நான் ஒருநாளும் அவளை விட்டிருக்க மாட்டான்... வறுமை ஐயா... பெத்த நாலையும் வளக்க ஏலாம இருக்கக்கை இதை எப்பிடி... எண்டுதான்...."

அவன் கண்ணீர் அவருக்குப் புரிந்திருக்கவேண்டும். அன்புள்ள ஏழைக் கணவன். அறியாமையுள் இலாபம் தேடும் உலகின் வலையுள் சிக்கிவிட்ட துயர உண்மை அவன் கண்ணீரில் வெளிப்படையால் இழுத்தது.

"சரி நீங்கள் வெளிய இருங்கோ. நாங்கள் முயற்சி செய்யிறம்..." அவன் வெளியே காத்திருந்தான். காற்றாடையற்ற இறுக்கம். வீட்டில் அவனையும் அவளையும் எதிர்பார்த்தபடி நான்கு சோடிச் சின்ன விழிகள் காத்திருக்கும். அயலவர்கள் துணையை நிச்சயத்துடன் எதிர்பார்க்கமுடியாது. பார்வதி சில நாட்களாய்க் கண்ணில் படவேயில்லை.

மெல்லப் படர்ந்த இருள் கனிந்து கனிந்து மண்டிற்று. எட்டு வருடகால இல்லறத்தில் அவள் எப்படி அவனை ஆட்கொண்டு விட்டாள். ஒரு கணம் விழிதிறந்து தன்னைக் காணாளோ என்ற அச்சம் அவன் உயிரை உலுக்கிற்று. அறிவு மயங்கும்வேளையிலும் அவனை நோக்கிய பரிவு அவள் விழிகளில் என்னமாய் விகசித்தது!

"ஐயா ஒருக்கா உள்ள வாங்கோ ..." தாதியின் அழைப்புக்கு பரபரப்பாய் அவளைத் தொடர்ந்தான்.

உள்ளே ஒருவித நிசப்தம் புதியதாயிருந்தது. எல்லோர் விழிகளும் இவனை நோக்குவதாய் உணர்ந்தான். நெஞ்சின் பதற்றம் நிறைந்தது. சாந்தியின் கட்டிலை நோக்கிப் பார்வை திரும்பிற்று. அவளில் இணைக்கப்பட்டிருந்த எல்லாக் கருவிகளும் நீக்கப்பட்டிருக்க ஒரு வெண்துணியால் அவள் மூடுப்பட்டிருப்பது தெரிந்தது. ⊙

# பாலையும் சோலையும்

## கலாநிதி.சொக்கனின் வாழ்க்கைப் பதிவுகள்

**ஈழத்தின் மூத்த எழுத்தாளர்களுள் ஒருவர் சொக்கன். இவருடைய எழுத்துப்பணி அரை நூற்றாண்டுக்கு மேற்பட்டது. கல்விப் பணி நான்கு தசாப்பதங்கள் கண்டது. இவர் லண்டனில் இருந்த பொழுது இலக்கிய அன்பர்கள் சிலரின் தூண்டுதலால் தமது கல்வி, இலக்கிய அனுபவங்களை முதன்மையாகக்கொண்டு தமது வரலாற்றை எழுதினார். "பாலையும் சோலையும்" என்ற தலைப்பில் அமைந்த மேற்குறித்த நூலின் (கணினிப்பிரதி ) சில பகுதிகளை இங்கு தொடர்ச்சியாகத் தருகின்றோம்.**

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

நான் எனது தொடக்கக் கல்வியை (முதலாம் வகுப்பிலிருந்து ஆறாம் வகுப்புவரை) யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியோடு இணைந்த ஆரம்பப் பாடசாலையிலேயே (இந்துக்கல்லூரித் தமிழ் வித்தியாசாலை) கற்றேன்.

இந்தப்பாடசாலை, இன்று கஸ்தூரியார் வீதியிலே (1-5வரை) பாரிய கட்டடங்களையும், பன்நூற்றுக் கணக்கான மாணவர்களையும், பெருந்தொகையான ஆசிரியர்களையும் கொண்டு, யாழ்ப்பாணத்திலே தலைசிறந்த தொடக்கப் பள்ளிகளில் ஒன்றாக இயங்கிவருகின்றது. புலமைப் பரிசிற் பரீட்சையிலே மிகப்பெருஞ் சாதனையை ஆண்டுதோறும் நிகழ்த்தி வருவது இப்பாடசாலைக்குப் பெருமை.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி, மானிப்பாய், கொக்குவில், காரைநகர், உரும்பிராய், சாவகச்சேரி முதலான ஊர்களிலே தன் சகோதரக் கல்லூரிகளை நிறுவி ஒரு சபையாக இயங்கிய காலத்தில், அச்சபை பெற்றெடுத்த கடைக்குட்டிப் பிள்ளையே நான் கற்ற இந்துக்கல்லூரித் தமிழ் வித்தியாசாலை.

இன்று விசாலிக்கப்பட்டுள்ள இந்துக்கல்லூரி விளையாட்டு மைதானத்தின் மேற்குத்திசையிலே சுமார் நூறடி நீளம், அறுபதடி அகலத்தில் ஒரே மண்டபமாகத் கட்டப்பட்டு, ஓரடி உயரமான சீமெந்துத் தரையுடன், கிடுகினால் வேயப்பட்ட கூரை வேய்தலும், கரைப் புறங்கள் ஓட்டு வேய்தலும் கொண்டதாய் இப்பாடசாலை அமைந்திருந்தது.



கலாநிதி க.சொக்கலிங்கம்
(சொக்கன்)

மேற்கூரையுடன் கூடிய தகரப் படலைக்கும், பாடசாலைக் கட்டடத்துக்கும் இடைப்பட்ட முற்றத்தின் ஒருபகுதியில் இறுங்கு பயிரிடப்பட்டிருக்கும். அதற்கு வடபுறத்தில் சலகூடம். மண்டபத்தில் ஓர் அறை அலுவலகத்திற்காக வடகிழக்கு மூலையில் இருந்தது.

இக்காலத்தைப்போல வகுப்பறைகளோ, குறைந்த பட்சம் தட்டிகளால் பிரிக்கப்பட்ட தனி வகுப்புக்களோ இல்லாத காலம். ஒரே மண்டபத்தில் ஏழு வகுப்புக்கள். அரிவரி, முதலாம் வகுப்புக்களிலே உச்சஸ்தாயியில் அரிச்சுவடி, வாய்பாடு, பிள்ளைப்பாட்டுக்கள் என்பன கற்பிக்கப்படும். இரண்டாம், மூன்றாம், நான்காம் வகுப்புக்களிலும் இரைச்சலுக்குக் குறைவிராது. ஐந்தாம், ஆறாம் வகுப்புக்களிலேதான் ஓரளவு அமைதி நிலவும். காரணம் அந்த வகுப்புக்களிலே மாணவ, மாணவியரின் தொகை பத்துக்கு மேற்பட்டதாய் இராது. அதனால் சத்தமும் குறைவு. கண்டிப்பும் அதிகம்.

ஆங்கிலக் கல்வி கோலோசசியகாலம் அது. எங்கள் பாடசாலையிலே மூன்றாம் வகுப்புச் சித்தியடைந்தோரில் (சிலவேளைகளில் ஐந்தாம் வகுப்புச் சித்தியடைந்தோரும்) பொருளாதார வசதிபடைத்தோர் (ஆங்கிலக் கல்விக்கான கட்டணம் வழங்கும் வசதி படைத்தோரின் பிள்ளைகள்) இந்துக் கல்லூரிக்குச் செல்வது வழக்கமாய் இருந்தது. இவ்வகையில், யாழ்.இந்துக்கல்லூரியின் ஊட்டற் பாடசாலையாகவே (Feeder School) நான் படித்த பாடசாலை இயங்கி வந்ததெனலாம்.

கற்றலில் விருப்பமும், திறமையும் பெற்றிருந்தும் -பண வசதி குறைந்த என்போன்ற பிள்ளைகள் சிலரே, இப் பாடசாலையின் இறுதி வகுப்பு வரை கற்றோம்.

சிலர் என்று நான் கூறுவதில் ஓர் அர்த்தம் உண்டு. அக்காலத்தில் கல்வியைத் தொடர்ந்தோரிலும், இடை நடுவில் விட்டோர் தொகையே அதிகம். *(அடுத்த வாரம் தொடரும்)*

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு

மறம்மானம் மாண்ட வழிச்செறிவு தேற்றம்
எனநான்கே ஏமம் படைக்கு.

- திருக்குறள்.

## நமது நோக்கு

### அமைதிக்குத் தளமாகும் பலம்!

தமிழ் மக்களது விடுதலைப் போராட்டம் முனைப்புப் பெற்று, இன்று சர்வதேசமும் வியப்புடன் அங்கீகரித்திருப்பதற்குக் காரணமாக, அடித்தளமாக அமைந்தது விடுதலைப் புலிகளின் பலமே என்பதில் இருவேறு கருத்துக்களுக்கு இடமில்லை.

கடந்த பல வருடங்களாக போரியல் ரீதியில் விடுதலைப் புலிகள் பெற்றுள்ள வளர்ச்சியே - இன்றைய சமாதானச் சூழல் தோன்றுவதற்குக் காரணம் என்பது மட்டுமல்ல - தளராமல், கௌரவத்தோடும், உயர் மதிப்புடனும் தமிழர் தரப்பு தலைநிமிர்ந்து - இன்று நிற்பதற்கும் அதுவே உயிராயிருப்பதும் வெள்ளிடை மலை.

வீரம் செறியும் படையணியோடு, ஏராளம் போராளிகளோடு, கனரக ஆயுதங்களோடு, மிகப்பெரும் கட்டமைப்போடு தமிழ்த் தேசத்தின் இராணுவமாக - இராணுவ வல்லுநர்களின் புருவங்களை உயர்த்தவைக்கும் திறமையும், துணிவும், செயற்பாடும், அர்ப்பணிப்பும், தியாகமும் கொண்ட நிகரற்ற மரபுவழிப் படையாக வளர்ந்திருக்கும் விடுதலைப் புலிகள், தமிழர்களின் தேசிய இராணுவம் எனக் கூறிக்கொள்வதில் ஒவ்வொரு தமிழனுமே பெருமையடைகிறான்.

இவ்வாறானதொரு சூழலில் - தமிழர்களுக்கென நீதியான, தம்மைத் தாமே ஆளுகின்ற சுயாட்சியொன்று வழங்கப்படுமாயின், விடுதலைப் புலிகளே தமிழர் தாயகத்தின் தேசிய இராணுவமாக விளங்குவார்கள் என்பதிலும், தமிழ்மக்களின் பாதுகாப்பை வலுப்படுத்தக் கூடியவர்கள் அவர்களே என்பதிலும் - ஒவ்வொரு ஈழத் தமிழனுமே திடத்துடன் இருப்பதை அரசாங்கம் உணர்ந்து வருவதன் வெளிப்பாடாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பேச்சு அமைந்திருக்கின்றது.

விடுதலைப் புலிகளின் இராணுவம் இயங்கக்கூடியதாக சமஷ்டி அமைப்பொன்றை உருவாக்க முடியும். அதற்கு வழியிருப்பதாகக் கூறியிருப்பதன் மூலம் - தமிழ் மக்களின் தேசிய இராணுவமாக விடுதலைப் புலிகள் பலம் பெற்றிருப்பதை பகிரங்கமாக அங்கீகரிப்பதான கருத்து அவர் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

விடுதலைப் புலிகள் தமிழ்மக்களின் ஏகபிரதிநிதிகள் மட்டுமல்ல. தமிழர்களின் இராணுவமாக அவர்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பதனை அணுகும் முயற்சியாக பிரதமரின் பேச்சு அமைந்திருக்கின்றது.

இதேவேளை - யதார்த்தத்தை ஏற்றுக்கொள்ளக் கூடியதான நிலையில் அரசாங்கம் இருப்பதையும், பிரதமர் ரணிலின் பேச்சின் இன்னுமொரு இடத்தில் அவதானிக்க முடிந்தது.

"விடுதலைப் புலிகளின் ஆயுதங்களைக் களைவது என்ற பேச்சுக்கே தற்போது இடமில்லை. நிரந்தரத் தீர்வு ஒன்று எட்டப்படும்போது அதுபற்றி யோசிக்கலாம்" என அவர் குறிப்பிட்டிருக்கின்றார்.

இந்தவகையில் -

அரசியல் ரீதியாக மட்டுமல்ல, இராணுவ ரீதியாகவும் விடுதலைப் புலிகளை அங்கீகரிக்க வேண்டியதன் தேவையை,

அவ்வாறான விட்டுக்கொடுப்பின் மூலமே இத்தீவில் நிரந்தர அமைதிக்கும் சமாதானத்திற்கும் வழிவகுக்க முடியும் என்ற உண்மையை அரசாங்கம் மட்டுமல்ல - தென்னிலங்கை மக்களும் உணரவேண்டிய கட்டத்திலுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் பலத்தை அங்கீகரிப்பதன் மூலம், தமிழ்மக்களுக்கான உரிமைகளை வழங்குவதன் மூலம் மட்டுமே - இனியேனும் யுத்தத்தின் சத்தமின்றித் தாம் வாழமுடியும் என்பதை சிங்கள அரசியற் கட்சிகளும் உணரும் நாளே - நிரந்தர அமைதிக்கான கால்கோள் நாளாகவும் அமையும்.

1958, 1977, 1983 களில் நிராயுதபாணிகளான தமிழ் மக்களைக் கொன்றொழித்தது போல, 1983 க்குப் பின்னரும் வெற்றிகாண முடியாத யுத்தத்தில் அப்பாவித் தமிழ் மக்களை தாக்கியழித்தது போல - இனியும் தமிழினம் அடிவாங்கும் இனமாக இருக்காது என்பதை கடந்த வரலாறு உணர்த்தியிருப்பதை சிங்களக் கட்சிகள் பாடமாகக் கொள்ளவேண்டும்.

நெற்றியில் பொட்டு வைத்துக்கொண்டு திரியவும், பொது இடங்களில் தமிழில் பேசவும் அஞ்சும் நிலைக்கு தமிழினத்தை ஆளாக்கிய 'அந்தக் காலம்' மலையேறிப் போனதை இன்னமும் அழுத்தமாக அவை மனதிலிருத்த வேண்டும்.

'வொஷிங்ரன் போஸ்ட' பத்திரிகையின் செய்தியாளர் ஜோன் வரன் காஸ்ரர் கூறியது போல - விடுதலைப் புலிகளின் தலைவர் ஒரு நாட்டுக்குரிய அமைப்பைக் கட்டியெழுப்பிவிட்டதை - சிங்களக் கட்சிகள் திறந்த மனத்துடன் ஏற்றுக்கொள்ள முன்வரவேண்டும்.

ஓரிருதினங்களுக்கு முன் - வெளிவிவகார அமைச்சர் - Gulf News சஞ்சிகைக்கு தெரிவித்தது போல - தனது மக்களைத் தன்னோடு வழிநடத்துவது தலைவர் பிரபாகரனது மிகப்பெரிய வெற்றி என்ற கருத்தின் வழியே - தமிழ்மக்கள் விடுதலைப் புலிகளுக்குப் பின்னால் அணிவகுத்திருக்கின்றனர் என்பதை சிங்களக் கட்சிகள் தம் சிந்தனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்.

அவ்வாறானதொரு நிலையிலேயே - இலங்கைத் தீவில் சிங்கள, தமிழ் இனத்தவர் கௌரவத்துடனும், நட்புறவுடனும் வாழ்ந்து - இத்தீவை மகிழ்ச்சிக்குரிய பூமியாக் மாற்ற முடியும்.

# எதிர்க்கட்சிக் கூட்டணியை வலுப்படுத்த ஏனைய கட்சிகளுடனும் பேச்சு நடக்கும்!

## மாற்று அரசு அமைக்கும் முயற்சியில் ஜே.வி.பி. தீவிரம்

(கொழும்பு)

அரசாங்கத்துக்கு எதிரான எதிர்க்கட்சிகளின் கூட்டணியை வலுப்படுத்துவதற்காக பொதுஜன ஐக்கிய முன்னணியிலுள்ள ஏனைய கட்சிகளுடனும் ஜே.வி.பி. பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளது.

அடுத்த கட்டமாக பொதுஜன ஐக்கிய முன்னணியில் உள்ள அனைத்துக் கட்சிகளுடனும் பேச்சுக்கள் நடத்தப்படவுள்ளன. பொதுஜன ஐக்கிய முன்னணியின் செயலாளர் டி.எம்.ஜெயரத்ன தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணித் தூதுக்குழுவுடன் ஜே.வி.பி. கலந்துரையாடலை நடத்தவிருக்கின்றது.

தற்போது சுதந்திரக்கட்சி, ஜே.வி.பி. ஆகியவற்றுக்கிடையிலான கூட்டணி என்ற மட்டத்திலேயே பேச்சுக்கள் நடத்தப்படுகின்றன. இதனை பொதுஜன ஐக்கிய முன்னணி -.ஜே.வி.பி கூட்டணி என்ற நிலைக்குக் கொண்டுவருவதற்கே இப்பேச்சுக்கள் நடத்தப்படும் எனத் தெரியவருகின்றது.

அத்துடன், இந்தக் கலந்துரையாடலில் தேர்தல் ஒன்றை எதிர்கொள்ளாமலேயே புதிய அரசாங்கம் அமைப்பது தொடர்பாக ஆழமாக ஆராயப்படவுள்ளதாகவும் ஜே.வி.பி. வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இவ்விடயம் தொடர்பாக அனுரா பண்டாரநாயக்க, ஜே.வி.பி. பிரமுகர்களுடன் பல தனிப்பட்ட பேச்சுக்களை நடத்தி முடித்திருக்கின்றார்.

இதேவேளை, இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பாக ஜே.வி.பிக்கும், பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும் இடையில் தெளிவான பொது உடன்பாடு ஒன்றை உருவாக்கிக் கொள்வதற்காக, முன்னாள் வெளிவிவகார அமைச்சரும் ஜனாதிபதியின் ஆலோசகருமான லக்ஷ்மன் கதிர்காமருடனும் ஜே.வி.பி. பேச்சுக்களை நடத்தியிருக்கிறது.

பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும் ஜே.வி.பிக்கும் இடையிலான இறுதி உடன்பாடு குறித்து லண்டனில் உள்ள ஜே.வி.பி. தலைவர் சோமவன்ச அமரசிங்கவும் ஆராய்ந்து வருவதாகத் தெரியவருகின்றது.

## குமண பறவைகள் சரணாலயம் 20 வருடங்களின் பின் திறப்பு!

குமண பறவைகள் சரணாலயம் மீண்டும் திறக்கப்படவுள்ளது.வனவள அமைச்சின் கீழ் இயங்கிவந்த இப்பறவைகள் சரணாலயம், கடந்த 20 வருடங்களாக மூடப்பட்டிருந்தது.

மேற்படி சரணாலயத்தைச் சுற்றி, இராணுவத்தினர் பாதுகாப்பு அரண்களை அமைத்து நிலைகொண்டிருந்தனர். இதனால் அங்கு பொதுமக்கள் மற்றும் உல்லாசப் பயணிகள் செல்ல அனுமதிக்கப்படவில்லை.

தற்போது இலங்கைக்கான உல்லாசப் பயணிகளின் வருகை அதிகரித்து வருகின்றமையை அடுத்து, சரணாலயத்தின் உட்பகுதிகளில் கட்டடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

குமண பறவைகள் சரணாலயத்தில் 250 இன பறவைகள் இருக்கின்றன. சைபீரியா போன்ற தொலை தூர நாடுகளில் இருந்தும் இச்சரணாலயத்திற்கு பல்வேறு இனப் பறவைகள் வந்து தங்கிச் செல்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# தமிழ் - முஸ்லிம் உறவை வலுப்படுத்த வாழைச்சேனையில் கலந்துரையாடல்

வாழைச்சேனைப் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் தலைமையில் - தமிழ், முஸ்லிம் மக்களின் உறவுநிலையைத் தொடர்ந்தும் பேணுவது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

கலந்துரையாடலில் விடுதலைப் புலிகளின் மட்டு. -அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன், தளபதி ரெஜி, இராணுவ சிவில் நிர்வாக அதிகாரி, முஸ்லிம் சமாதான அமைப்பின் பிரதிநிதிகள், பள்ளிவாசல் தலைவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதன்போது முஸ்லிம் பிரதிநிதிகளால் - விடுதலைப் புலிகள், முஸ்லிம் மக்களிடம் நிதி அறவிடுகின்றனரா எனக் கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் இ.கௌஸ்சயன் பதிலளிக்கையில், முஸ்லிம் மக்களிடம் சமாதானப் பேச்சு தொடங்கிய காலம்முதல் நிதி அறவிடுவதனை புலிகள் முற்றாக நிறுத்திவிட்டனர் எனத் தெரிவித்ததுடன்,

முஸ்லிம் மக்கள் ஒன்றுசேர்ந்து ஒற்றுமையாக செயற்படவேண்டும். இல்லாவிட்டால் குழப்பநிலை அதிகரித்தவண்ணமே இருக்கும் என்றதுடன், அக்கரைப்பற்று கடத்தல் சம்பவத்தையும், ஓட்டமாவடி முஸ்லிம் சகோதரரின் படுகொலையையும் நினைவுபடுத்திக் கூறினார்.

முஸ்லிம் மக்கள் மத்தியில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீது சந்தேகம் எழுமாயின் அவற்றை உறுதிப்படுத்துவதற்காக விடுதலைப் புலிகளுடன் நேரடியாகத் தொடாபு கொள்ளுமாறும் அவர் கூறினார். தமிழ், முஸ்லிம் மக்கள் மத்தியில் ஏற்படும் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காகப் பிரதேச செயலாளர் தலைமையில் இருதரப்புக்களும் அடங்கிய குழு ஒன்றும் இச்சந்திப்பில் தெரிவுசெய்யப்பட்டது.

## மீண்டும் சொந்த இடங்களில் இயங்கும் இயக்கச்சி, கோவில்வயல் பாடசாலைகள்

பளைப் பிரதேசத்தில் இவ்வாண்டு மேலும் இரு பாடசாலைகள் சொந்த இடங்களில் இயங்க ஆரம்பித்துள்ளன.

இயக்கச்சி அ.த.க.பாடசாலையும், கோயில் வயல் அ.த.க. பாடசாலையுமே தற்பொழுது சொந்த இடங்களில் இயங்கத் தொடங்கியுள்ளன. இருந்தபோதும் இப்பாடசாலைகள் அடிப்படை வசதிகள் எதுவுமின்றிக் காணப்படுகின்றன. நிரந்தரக் கட்டடம், குடிநீர், ஆசிரியர் பற்றாக்குறை, தளபாடப் பற்றாக் குறைப் பிரச்சினைகள் இப்பாடசாலைகளில் காணப்படுகின்றன.

இரு பாடசாலைகளிலும் நூற்றுக்கும் அதிகமான மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.(115)

# முகமாலை ராணுவ சோதனைச் சாவடியில் புலனாய்வுத்துறை மக்களுக்குத் தொல்லை

(யாழ்ப்பாணம்)

ஏ-9 வீதியால் வன்னி மற்றும் வெளிமாவட்டங்களில் இருந்து யாழ்.குடாநாட்டிற்கு வரும் பயணிகள், முகமாலை இராணுவச் சோதனைச் சாவடியில் வைத்து இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால் சிரமங்களுக்கு உள்ளாக்கப்படுவதாகப் பயணிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக வன்னிப் பிரதேசத்திலிருந்து யாழ்.குடாநாட்டிற்கு வரும் மக்களிடம் விடுதலைப் புலிகள் தொடர்பான தகவல்களைத் திரட்டும் வகையில், பயணிகளை வழிமறித்து இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு, சிரமங்களைக் கொடுத்து வருகின்றனர்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டு, இயல்புவாழ்க்கை ஏற்படுத்தப் பல்வேறு செயற்பாடுகள் இடம்பெறும் இவ்வேளையில், இவ்வாறு மறித்து விசாரணைசெய்து நேரத்தை வீணடிப்பது தொடர்பாகப் பயணிகள் கவலையும் விசனமும் தெரிவிக்கின்றனர். (96)

# ஓய்வுபெறும் ஆசிரியருக்குப் பதிலாக பட்டதாரிகள் நியமனம் அதிகமாகும்!

கல்வித்துறையில் ஆசிரியர்களாகக் கடமையாற்றி ஓய்வு பெற்றவர்களுக்குப் பதிலாக நியமிக்கப்படும் பட்டதாரிகளின் எண்ணிக்கையை மேலும் அதிகரிக்க கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு தீர்மானித்துள்ளார்.

ஓய்வுபெறும் ஆசிரியர்களுக்குப் பதிலாக தற்போது பட்டதாரிகள் நியமிக்கப்பட்டு வருகின்றனர். இந்த எண்ணிக்கை 1,250 ஆக அதிகரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இதற்காக, திறைசேரியின் அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துவருகின்றது.

தொழில் வாய்ப்பை எதிர்பார்த்து 17,000 பட்டதாரிகள் காத்திருப்பதாகவும், நியமனம் வழங்கப்படும்போது - வெற்றிடங்கள் உள்ள மாவட்டங்களிலுள்ள பட்டதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்றும் அமைச்சர் கூறினார்.

இதேவேளை, தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றுபவர்களை ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் சேர்ப்பதற்கும், நிலவும் வெற்றிடங்களுக்கு நியமிப்பதற்கும் நடவடிக்கை எடுப்பதாக கல்வி அமைச்சர் கொடித்துவக்கு மேலும் கூறினார்.

# அரச சேவையில் கிடைக்கும் வருமானத்தை விட விவசாயம் செய்ததால் அதிகமாகச் சம்பாதித்தேன்!

**சங்குவேலியைப் பிறப்பிடமாகக் கொண்ட கந்தையா அருமைத்துரை ஒரு சிறந்த விவசாயியாக விளங்குகிறார். அரசவேலை கிடைத்தும், அதனைக் கைவிட்டு விவசாயத்தை மேற்கொண்டு, மாதாந்த விவசாய ஓய்வூதியப் பணத்தையும் இவர் பெறுகின்றார். 65 ஆவது வயதில் இன்றும் விவசாயத்தை மேற்கொண்டு, விவசாயம் சம்பந்தமான கருத்துக்களையும், ஆலோசனைகளையும் வழங்கி வருகின்றார்.**

**அவரை விருந்தினர் பக்கத்திற்காகச் சந்தித்தபோது –**



க.அருமைத்துரை

*கேள்வி:* சிறந்த விவசாயியாக எல்லோராலும் பேசப்படும் நீங்கள் ஆரம்பத்தில் விவசாயத்தில் ஈடுபட்டமைக்கான காரணங்களைக் கூறமுடியுமா?

*பதில்:* எங்கள் கிராமம் ஒரு சிறந்த விவசாயக்கிராமம் ஆகும். இக கிராமத்தில் பிறந்த எங்கள் முன்னோர்கள் எல்லோரும் விவசாயத்தைத் தொழிலாக மேற்கொண்டவர்கள. எனது தந்தையாரும் விவசாயத்தைத் தொழிலாக மேற்கொண்டமையால், என்னையும் தந்தையாருடன் இணையச் செய்தது. நான் சிறுவனாக இருக்கும்பொழுது, தாயாரும் தந்தையாரும் தோட்டத்துக்குச் செல்லும்போது என்னையும் அழைத்துச் செல்வார்கள். அங்கு எனது தந்தை துலா மிதிக்க, அம்மா தண்ணீர் அள்ளி பாய்ச்சுவார். நான் சிறுவன் என்றபடியால் இவற்றை அவதானித் தவாறு இருப்பேன். காலப்போக்கில் பாடசாலை செல்லும் பருவத்தில் அதிகாலையில் எழுந்து தந்தைக்கு உதவியாகத் தோட்டத்திற்குச் செல்வேன். அங்கு நான் துலாமிதிக்க, தந்தையார் தண்ணீர் அள்ளிப் பாய்ச்சுவார். மற்றும் அவருக்கு உதவியாகச் சிறுசிறு வேலைகளையும் செய்வேன். இதன்பின்பு பாடசாலை சென்று வந்து, மீண்டும் தோட்டத்துக்குச் சென்று- தந்தையுடன் வேலைகளைச் செய்வேன். இவ்வாறே தினமும் நடைபெற்றுவந்தமையால், எனக்குப் படிக்கின்ற வாய்ப்பும், சந்தர்ப்பமும் குறைவாக இருந்தது. பல கஷ்டங்களுக்கு மத்தியில் எனது கல்வியினை இடைநிறுத்தாமல் எஸ்.எஸ்.சி.வரையும் கல்வி கற்றேன். எனக்கு ஒரு அரசாங்க வேலையும் கிடைத்தது. ஆனால், நான் அத்தொழிலை விரும்பாதபட்சத்தில் இன்றும் விவசாயியாகவே வாழ்கிறேன்.

*கேள்வி:* இன்று நம்மவர்கள் அரச வேலையைத் தேடியும் எதிர்




பார்த்தும் இருக்கின்ற வேளையில், உங்களுக்குக் கிடைத்த அரச தொழிலைக் கைவிட்டு ஏன் விவசாயத்தை மேற்கொண்டீர்கள் எனக் கூற முடியுமா?

*பதில்:* ஆம். இது நல்ல கேள்விதான். விவசாயச் சூழலில் வாழ்ந்த எனக்கு விவசாயத்திலேயே அதிக நாட்டம் ஏற்பட்டது. எனக்குக் கிடைதத அரச வேலையின் மாத வருமானத்தை விட, விவசாயத்தினை மேற்கொண்டதனால் கிடைத்த மாதவருமானம் அதிகமாக இருந்தது. ஒரு மாத அரச வருமானத்தைவிட ஒரு அந்தர் வெங்காயம் விற்கும் காசு அதிகமாக இருந்தது. அத்துடன், எனது தாய், தநதையர் நான் விவசாயம் செய்வதையே விரும்பினர். இந்த விவசாயத் தொழிலைச் செய்தமையினால், பெற்ற உயர்ந்த நிலையினை அரச தொழிலை ஏற்றிருந்தால் அடைந்திருக்க முடியாது.

*கேள்வி:* தங்களை எல்லோரும் சிறந்த விவசாயி எனக் கூறுவதைக் கேள்விப்பட்டிருக்கிறோம். அவ்வாறு உங்களை அவர்கள் அழைப்பதற்கு, அவ்வாறு தெரிவு செய்தமைக்கான காரணங்களைக் கூறமுடியுமா?

*பதில்:* கடந்த காலங்களில் நடைபெற்ற பல விவசாயச் செய்கைப் போட்டிகளில் நான் பங்குபற்றியுள்ளேன். குறிப்பாக டட்லி சேனநாயக்க ஆட்சிக் காலத்தில் வடபகுதியில் நெல் உற்பத்தி செய்யும் விவசாயிகளுள் சிறந்த விவசாயினைத் தெரிவு செய்வதற்கான போட்டியில் நான் முதலிடம் பெற்றேன். இவ்வாறு தொடர்ந்து மூன்று ஆண்டுகள் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளேன். இதன் மூலம் இலவசமாக இந்தியா செல்ல வாய்ப்புக் கிடைத்ததுடன், அங்கு நடைபெற்ற விவசாயக் கருத்தரங்குகளிலும் பங்குபற்ற வாய்ப்புக் கிடைத்தது. அத்துடன், அண்மையில் சிறந்த கத்தரிப் பயிர்ச் செய்கையாளராகவும் தெரிவு செய்யப்பட்டேன்.

*கேள்வி:* சிறந்த கத்தரிப் பயிர்ச் செய்கையாளராகத் தெரிவு செய்யப்பட்ட தாங்கள், கத்தரிப் பயிர்செய்கை பற்றிச் சுருக்கமாகக் கூற முடியுமா?

*பதில்:* கத்தரி நாற்று மேடை போடப்பட்டு 18 நாள் தொடக்கம் 35 நாட்கள் வரைக்கும் வசதிக்கு ஏற்றபடி பிடுங்கி நடலாம். நாற்று மேடையிலோ அல்லது நடும் இடத்திலோ குறிப்பாக, எறும்புகள் பயிரைத் தாக்காதவாறு பராமரிக்க வேணடும். ஆரம்பத்தில் எறும்பினுடைய தாக்கம் சிறிதாக இருந்து- காலப் போக்கில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும். கத்தரியானது காய்க்கினற காலத்தில் காய்களை நன்கு முற்றவிடாது பறித்தல் வேண்டும். நன்கு முற்றவிட்டுப் பறித்தால், கத்தரி காய்கின்றதன்மை குறைவாகக் காணப்படும். மற்றும் ஆனி, ஆடி மாதங்களில் "பணங்கட்டி எறும்பு" என்ற ஒரு வகை எறும்பின் தாக்கம் ஏற்பட வாய்ப்புண்டு. இதன் தாக்கத்தினால் கத்தரிச்செடியில் சுண்ணாம்பு போன்ற வெண்மையான நிறம் படிந்து காணபபடும். இதனால் கத்தரி நோய்வாய்பபட சந்தர்ப்பம் உண்டு. இதை நன்கு அவதானித்து பராமரிக்கவேண்டும். இவ்வாறு பேணிவந்தால் ஒரு வருடத்துக்கு மேல் கத்தரி பயன்தரும்.

*கேள்வி:* உங்களுக்குக் கிடைக்கும் ஓய்வு நேரங்களை எவ்வாறு பயன்படுத்துவீர்கள்?

*பதில்:* எனக்குக் கிடைக்கின்ற ஓய்வுநேரங்களை வானொலியில் ஒலிபரப்பாகும் விவசாயம் சம்பந்தமான கருத்துக்களையும், ஆலோசனைகளையும் மற்றும் விவசாயம் சம்பந்தமான என்ன விடயங்களாக இருந்தாலும் கேட்பேன். விவசாயம் சம்பந்தமாக ஆலோசனை பெற வரும் விவசாயிகளுக்கு விளக்கங்களும், ஆலோசனைகளையும் வழங்கி வருகிறேன்.

*கேள்வி:* யாழ்ப்பாண விவசாய நிலைமை எவ்வாறு உள்ளது?

*பதில்:* ஆரம்பத்திலுள்ள விவசாய நிலையையும், இன்றுள்ள விவசாய நிலையையும் எடுத்துப் பார்த்தால்- பாரிய இடைவெளி காணப்படுகிறது. அதாவது, விவசாயத்தில் ஈடுபடுகின்றவர்களின் எண்ணிக்கை கணிசமாக வீழ்ச்சியடைந்து, ஏனைய துறைகளில் ஈடுபடுவதன் அளவு மேலோங்கியுள்ளதைக் காணலாம். இந்நிலைமையினால் இறுதியில் ஏற்படக்கூடிய மொத்த விளைவு, நாம எமக்கான உணவைப் பெறுவதில்கூட பல கஷடங்களை எதிர் நோக்க வேண்டிய சூழல் உருவாகும்

**சந்திப்பு: எஸ்.சாந்தகுமார்.**

# ஆசிரியர்கள் மீதான தரக்கணிப்பீடு; குறைகள் பல களையப்பட வேண்டும்!

◆ ஆசிரியர் தரக் கணிப்பீடு பலரால் பல சந்தர்ப்பங்களில் பல வகையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

◆ இது 144 அம்சங்களைக் கொண்டது. இதன் பெறுபேற்றைப் பொறுத்தே சம்பள உயர்வு. பதவி உயர்வு எனப் பறைசாற்றிப் பரபரப்பை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

◆ இதற்கான கால்கோள் நிகழ்வுகள் பல இடங்களில் கோலாகலமாக ஆரம்பிக்கப்பட்டும்விட்டது.

இவ்விடயங்களை நோக்கின் இவை மாணவர்களின் கல்வி அபிவிருத்தி, மேம்பாடு என்பனவற்றை மறைத்து, ஆசிரியர்களை உஷார்படுத்தலுக்கான ஓர் அறைகூவலாகத் தோன்றுகின்றது. உண்மையில் நாம் மேற்கொள்ளும் எவ்விடயமாயினும் மாணவர்களை மையமாகக் கொணடே தீர்மானிக்க வேண்டும். இது கல்வியியலாளர்களின் குறைந்தபட்சக் கருத்தும் கூட.

எனவே- இங்கு மிகமுக்கியமாக இருவிடயங்கள் கருத்தில் கொள்ள வேண்டியதாகும்.

1. இத்தரக் கணிப்பீட்டின் மூலம் மாணவர்களின் கல்வி எவ்வாறு அபிவிருத்தி செய்யப்படுகின்றது.

2. மாணவர்களை, ஆசிரியர்கள்- தரக்கணிப்பீட்டின் ஊடாக எவ்வாறு கல்விச் செயற்பாட்டுக்குச் சிறந்த முறையில் இட்டுச் செல்லப் போகிறார்கள் என்பதாகும்.

ஆயினும் - இச்செயலாற்றுகைத் தரக்கணிப்பீடானது இவற்றிற்கு முக்கியத்துவம் கொடுப்பதிலிருந்து விலகி ஆசிரியர்களை உசுப்பிவிடுவதாகவும் (Alert), அவர்களைச் சந்தேகத்துடன் நோக்குவதாகவும், ஆசிரியர்கள் இத்தரக்கணிப்பீட்டை ஜீரணித்துக்கொள்ள தயங்குவது போன்றும் சமூகத்திற்குக் காண்பிக்க முயல்வது வேதனை தரும் விடயமாகும்.

ஒரு ஆசிரியர், ஆசிரியனாக மட்டுமன்றி ஒரு மாணவனின் பெற்றோராகவும், சகோதரராகவும் காணப்படுவதை யாரும் மறந்து விடக்கூடாது. எவ்விதத்திலாயினும் உண்மையில் கல்வி அபிவிருத்தி ஏற்படுமாயின் ஆசிரியன்தான் முதலில் திருப்தி அடைபவனாவான். எனவே, ஒரு சில சக்திகள் இத்தரக்கணிப்பீட்டைப் பிழையான வியாக்கியானத்துடன் உச்சரிப்பது கவலைக்குரியது. மற்றும் இத்தரக் கணிப்பீட்டில் உள்ள குறைபாடுகளைப் போக்கி அவற்றைச் சீராக்க வேண்டிய காலத்தின் கட்டாயம் இப்போது உணரப்பட்டுள்ளது. இச்செயலாற்றுகைத் தரக் கணிப்பீட்டில் பின்வரும் விடயங்களும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

1. நாடு பூராவும் இது நடைமுறைப்படுத்தவுள்ளமையால் மக்களின் வாழ்க்கை அமைப்பும், வாழ்க்கைத்தரமும் கவனத்தில் கொள்ளப் படல்வேண்டும். அதாவது - நகரில் உள்ள ஒரு பெரிய பாடசாலையில் கற்பிக்கும் ஒரு ஆசிரியரும், கிராமப்புறத்தில் உள்ள சிறிய ஒரு பாடசாலையில் கற்பிக்கும் ஒரு ஆசிரியரையும் குறித்த பாடப்பரப்பில் சமனாகத் தரக் கணிப்பிடுதல், நோக்கத்தைப் பயனற்றதாக்கிவிடும். எனவே மாணவர்களின் வாழ்க்கை நிலைக்கு ஏற்ப ஒரு "சுட்டியை" கொடுத்து அதையும் தரக் கணிப்பீட்டுடன் சேர்ப்பதன் மூலமே உண்மையான தரக் கணிப்பீட்டைக் காணக்கூடியதாகவிருக்கும்.

2. ஆசிரியர்களுக்கு இந்த 144 அம்சங்களும் மிகத் தெளிவாகவும், விளக்கமாகவும் தெரிவிக்கப்படுதல் வேண்டும். அவை ஆவணப்படுத்தப்பட்டு வழங்கப்படல் வேண்டும்.

3. பரீட்சார்த்தமாக ஒரு சுற்று நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.

4. கற்பித்தல் உபகரணங்களுக்கான நிதி வழங்கப்படுதல் வேண்டும்.

5. தரக்கணிப்பீடும், கற்றல் கற்பித்தல் செயற்பாட்டின் ஒரு பகுதியாகும். இது மாணவர்களின் நேரத்தில், கற்றல் கற்பித்தலில் எவ்வளவு பங்காகக் குறைந்தபட்சம் இருத்தல் வேண்டுமென முன்கூட்டியே முடிவு செய்தல் வேண்டும்.

6. இத்தரக்கணிப்பீட்டில் இடர்பாடுகளை நோக்கும் ஆசிரியர்களுக்கான மாற்றுத் திட்டம், பரிகாரம் முன்வைக்கப்படல் வேண்டும்.

7. இத் தரக்கணிப்பீடானது ஆசிரியரின் செயற்திறனை, வினைத்திறனுடன் கூடிய உச்சப்பெறுமானத்திற்கு இட்டுச் செல்வதற்கான ஒரு செயற்திட்டமென கொள்கை அளவில் ஏற்றுக்கொள்ளல் வேண்டும் அல்லது ஆசிரியருக்கு உணரச் செய்தல் வேண்டும்.

இவைகளைக் கருத்தில் கொள்ளும்போது சகலரும் ஒருங்கிணைந்து செயற்படக் கூடியதாகவும் குறித்த இலக்கை அடையக் கூடியதாகவும் அமையும்.

மேலும், அமைச்சரில் இருந்து அதிகாரிகள் வரையும் இத்தரக் கணிப்பீட்டுடன் ஆசிரியரின் பதவி உயர்வு, சம்பள அதிகரிப்புப் போனற விடயங்களைத் தொடர்புபடுத்திப் பக்கம் பக்கமாக அறிக்கை விடுகின்றார்கள். இங்கு யாவரும் கருத்தில் கொள்ள வேண்டிய விடயம்

ஆசிரியர்கள் ஏற்கனவே ஐந்து தரமாக வகைப்படுத்தப்பட்டுள்ளனர்.

அவையாவன: 3II, 3I, 2II, 2I, I. இவர்களுக்கு வெவ்வேறான சம்பளத்திட்டமும் உண்டு. இது 2000 ஆம் ஆண்டில் இருந்து அறிமுகம் செய்யப்பட்டது. இதற்கு ஒரு புள்ளித்திட்டமும் உண்டு. அது சேவைக் காலத்தைக் கருத்திற்கொண்டு கணிக்கப்படுகின்றது.

அந்நடைமுறையால் ஒரு வகுப்பிலிருந்து அதற்கு அடுத்த வகுப்பிற்குச் செல்லவேண்டுமாயின் பெற வேண்டிய புள்ளி எவ்வளவு? என்று கூறிய அத்திட்டம் பதவி உயர்வுக்கான நடைமுறை என்ன? என்பதைக் கூறாது மூடுமந்திரமாகவுள்ளது. கல்வி அதிகாரிகளோ, தங்களுக்கு அடுத்த வகுப்பிற்கு உள்வாங்குவதற்கான சுற்றுநிருபம் வரவில்லை. அதற்கான அதிகாரம் எமக்கில்லை. மந்திரிசபை அதற்கான முடிவை எடுக்கவேண்டும் எனவும் கூறுவது "லாடனை வைத்துக் கொண்டு குதிரையைத் தேடும் கதையாக" உள்ளது.

எனவே - தற்போது தரக்கணிப்புடன் எவ்வாறு சம்பள ஏற்றம் வழங்கப்படவுள்ளது. எவ்வாறு பதவி உயர்வு வழங்கப்படவுள்ளது. என்பவற்றை அமைச்சரின் காரியதரிசியின் கையொப்பத்துடன் கூடிய சுற்றுநிருபத்தைப் பெறுவது நல்லது. அதிலும் இத்தரக்கணிப்பீட்டை மேற்கொள்ளமுன்பு அச்சுற்று நிருபத்தை பகிரங்கப்படுத்தின் ஆசிரியர்க்கு அது ஒரு பெரிய வரப்பிரசாதமாகும்.

- மு.சுகுமார்

## விபத்தில் இளைஞர் காயம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிளும் ஆட்டோவும் விபத்துக்குள்ளானதில் இளைஞன் ஒருவர் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று நல்லூர் முன் வீதியில் நடைபெற்ற விபத்தில் கல்வியங்காட்டைச் சேர்ந்த இராசரத்தினம் ஜெகன் (வயது 24) என்பவரே தலைப்பகுதியில் காயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். (ச)

## நெடுமாறன் மீதான வழக்கு விசாரணை இன்று

(திருச்செந்தூர்)

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகப் பேசினார் என்ற குற்றச்சாட்டில் பொடா சட்டத்தின் கீழ் கைதான தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன் மீதான விசாரணை இன்று நீதிமன்றத்தில் விாசரணைக்காக எடுத்துக்கொள்ளப் படவுள்ளது.

1992ஆம் ஆண்டில் பொதுக் கூட்டமொன்றில் புலிகளுக்கு ஆதரவாகப் பேசியதாக அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

## கட்டடத் தொழிலாளி விழுந்து காயம்

(கொழும்புத்துறை)

மானிப்பாய் பகுதியில் கட்டடம் கட்டும் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தவேளை சாரம் முறிந்து விழுந்ததில் காயமடைந்த இளவாலைவாசி யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுக்காலை 10 மணியளவில் இடம்பெற்ற மேற்படி சம்பவத்தில் சிக்கி இளவாலையைச் சேர்ந்த அந்தோனி தாவீது (வயது 41) என்பவரே சிசிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார். (60)

# வெளிநாடுகளிலிருந்து அகதிகளை திருப்பி அனுப்ப இது தருணமல்ல!

## யு.என்.எச்.சி.ஆர். பேச்சாளர் அறிவிப்பு

தமிழகத்திலிருந்தோ அல்லது ஐரோப்பிய நாடுகளிலிருந்தோ இலங்கை அகதிகளை உடனடியாகத் திருப்பி அனுப்பும் திட்டத்துக்கு அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதுவராலயம் (யு.என்.எச்.சி.ஆர்) கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

யு.என்.எச்.சி.ஆரின் ஊடகப் பேச்சாளர் பிரெண்டா பரேட் (Brenda Barrett) இந்தத் தகவலை வெளியிட்டிருக்கிறார்.

இன்னமும் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் பல இடங்களில் கண்ணிவெடிகள் அகற்றப்படாத நிலையே உள்ளது. அத்துடன் இப்பகுதிகளில் அடிப்படைக் கட்டுமானங்கள் இன்னமும் ஏற்படுத்தப்படவில்லை.

இதனால் பாதுகாப்பற்ற பிரதேசங்களில் இப்போது அவசர அவசரமாக மீள் மீள்குடியமர்வை மேற்கொள்வது சாத்தியமற்றதாகும். இதனால் தமிழகம் மற்றும் ஐரோப்பிய நாடுகளில் இருந்து இலங்கை அகதிகளை மீளத்திருப்பி அனுப்பும் திட்டத்தை யு.என்.எச்.சி.ஆர். ஊக்குவிக்காது.

அகதிகள் மீள் வருகைக்கு இப்போது பொருத்தமான காலமில்லை. இந்த நிலைப்பாடு குறித்து இலங்கை அரசாங்கத்துக்கு தெளிவாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

கடந்த வருடம் ஜனவரி முதல் ஒக்ரோபர் மாதம் வரையான காலப் பகுதியில் யாழ். நோக்கியும், யாழ்ப்பாணத்துக்குள்ளும் ஒரு லட்சத்து 33 ஆயிரத்து 83 அகதிகள் திரும்பியுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 41 ஆயிரத்து 451 அகதிகளும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 30 ஆயிரத்து 572 அகதிகளும், வவுனியா மாவட்டத்தில் 13 ஆயிரத்து 323 அகதிகளும், மன்னார் மாவட்டத்தில் 9 ஆயிரத்து 909 அகதிகளும், திருகோணமலை மாவட்டத்தில் 7 ஆயிரத்து 868 அகதிகளும் மீளக்குடியேறியுள்ளனர் எனவும் யு.என்.எச்.சி.ஆரின் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

### பதவி உயர்வு

வடமராட்சி தெற்கு மேற்கு கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் பணியாற்றும் 12 கிராம அலுவலர்கள் தரம் 1 இற்கு பதவி உயர்த்தப்பட்டுள்ளனர். சி.குணராசா, கி.வரதராசா, ந.தங்கத்துரை, ந.கந்தசாமி, ப.பரஞ்சோதி, மு.வேதாபரணம், ஆ.சூரியகுமார், இ.சோமசுந்தரம், வ.பாலசிங்கம், பொ.மயில்வாகனம், வே.தியாகராசா, அ.விஜயகுமார், ஆகியோரே பதவி உயர்த்தப்பட்டவர்களாவார்.


நமது ஈழநாடு வழங்கும்

உலகக் கிண்ண கிரிக்கெட் - 2003

'MEGA' பரிசுப் போட்டி



முதற்பரிசு - 25,000
இரண்டாம் பரிசு - 15,000
மூன்றாம் பரிசு - 10,000

இன்னும் ஏராளமான ஆறுதல் பரிசுகள்



வினாக்கொத்துக்கு விடைதந்து பரிசுகளை அள்ளிச் செல்லுங்கள்!

இன்னும் ஒருசில தினங்களில் முழுவிபரம்!!


# யாழிற்கு பல மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டும் அமைச்சுக்கள் பணிகளைச் செய்யவில்லை!

## சாடுகின்றார் அமைச்சர் மகேஸ்வரன்

எந்தக் காலத்திலும் நான் ஐ.தே.கவை விட்டு வெளியேறி பொதுஜன ஐக்கிய முன்னணிக்குக் கட்சி மாறமாட்டேன். அரசாங்கத்தில் தமிழ்மக்களைப் பாதிக்கின்ற நடவடிக்கைகளுக்கு எதிராகக் கட்சிக்குள்ளிருந்தே எதிர்த்துப் போராடுவேன் என அமைச்சர் மகேஸ்வரன் தெரிவித்தார்.

நேற்று அவரது வீட்டில் நடாத்திய செய்தியாளர் மாநாட்டில் மேலும் தெரிவித்ததாவது,

யாழ்.மாவட்ட மக்களின் அன்றாடத் தேவைகளையும் அன்றாடப் பிரச்சினைகளையும் வெளியில் கொண்டு வருவதும், மக்களின் நலன்கள் சம்பந்தமாகவும் நாடாளுமன்றத்தில் குரல் கொடுப்பதும்தான் நாடாளுமன்ற உறுப்பினரான எனது கடமை.

இதற்கமைவாக, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தில் கடந்த 14 மாதங்களாக அமைச்சராக இருந்து வருகின்றேன்.

ஆட்சியிலிருக்கும் எமது அரசாங்கம் அமைச்சரவையிலுள்ள 52 அமைச்சர்களுக்கும் பல கோடி ரூபா நிதியினை ஒதுக்கியுள்ளது. இந்த அமைச்சர்கள் இந்நிதியைப் பயன்படுத்தித் தென்பகுதியில் ஒருசில வேலைத்திட்டங்களைச் செய்திருக்கின்றனர்.

ஆனால், யாழ்ப்பாண மாவட்டத்தில் சமூக சேவைகள் அமைச்சு, தகவல் தொலைத்தொடர்பு அமைச்சு, விளையாட்டு அமைச்சு ஆகியவைதான் சிறு வேலைத்திட்டங்கள் என்றாலும் செய்திருக்கின்றன. வேறெந்த அமைச்சும் இங்கு எந்தவிதப் பணியும் செய்யவில்லை.

குறிப்பாக 300 மில்லியன் ரூபா புனர்வாழ்வு அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டது. கால்நடை அமைச்சு, விவசாய அமைச்சு, போக்குவரத்து அமைச்சு, பெருந்தெருக்கள் அமைச்சு, மகளிர் விவகார அமைச்சு என்பவற்றிற்கும் பல மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டது. ஆனால் இந்த அமைச்சுக்கள் யாழ்.குடாநாட்டில் எந்தவிதமான வேலைத்திட்டங்களையும் செய்யவில்லை.

அரசாங்கம் அமைக்கக்கூடியதொரு கட்சியுடன் சேர்ந்து போட்டியிடும்போதுதான், எமது மக்களின் பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்ற அடிப்படையிலும் - ஈ.பி.டி.பி. போன்ற தேசவிரோத கட்சிகளின் செயற்பாடுகளைத் தோற்கடிப்பதற்கும்தான் நான் ஐக்கிய தேசியக் கட்சியில் கடந்த இரண்டு தேர்தல்களிலும் போட்டியிட்டேன்.

114 ஆசனங்களுடன் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியமைப்பதற்கு எனது ஆசனமும் ஓர் முக்கிய காரணம்.

எனது ஆதரவுடன் இயங்கும் ஓர் அரசாங்கம், ஈ.பி.டி.பிக்கு உதவி செய்வதை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன். கடந்த காலங்களில் சந்திரிகா அரசாங்கம் ஈ.பி.டி.பிக்கு 36 லட்சம் ரூபா கொடுத்தது. முன்பு பிரேமதாச காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சி ஈ.பி.டி.பிக்கு ஆயுதம் கொடுத்ததும் நிதியுதவி செய்ததும் எல்லோருக்கும் தெரியும்.

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் தொடர்ந்து ஈ.பி.டி.பிக்கு உதவி செய்வதைத் தெரிந்துகொண்டும் அதை என்னால் அனுமதிக்க முடியாது. கடந்த வருடம் ஈ.பி.டி.பிக்கு எழுபது லட்சம் ரூபா அரசாங்கத்தால் வழங்கப்பட்டுள்ளது. இதேபோல் புளொட், ரெலோ ஆகியனவும் அரசாங்கத்திடம் நிதி வாங்குகின்றன.

ஆனால், ரெலோ தலைவர் சிறிகாந்தா, தாம் அரசாங்கத்திடம் எந்தவித நிதியும் வாங்கவில்லை என அறிக்கை விட்டுள்ளார். நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன்தான் இந்த நிதியை வாங்கியுள்ளார். இவர் இப்போது நாடாளுமன்றத்திற்கும் வருவதில்லை.

இவர் இந்த நிதியைக் கட்சிக்கும கொடுப்பதில்லை. இப்படியிருக்கும் போது ரெலோ தலைவர் சிறிகாந்தாவிற்கு கட்சிக்குள் என்ன நடக்கின்றது என்று தெரியவில்லையோ அல்லது முழுப்பூசணிக்காயை சோற்றுக்குள் மறைக்க முற்படுகின்றாரோ தெரியவில்லை.

இதைப்போல்தான் சுரேஸ் பிரேமச்சந்திரனும். இப்படிக் கூட்டமைப்பில் இருக்கும் பல கட்சிகள், அரசாங்கத்திடம் சம்பளம் வாங்கும்போது, எப்படி அரசாங்கத்தை எதிர்த்துக் கதைக்க முடியும். பாதுகாப்பு அமைச்சிடம் இரகசியக் கணக்கொன்று உள்ளது. இதன் மூலந்தான் இந்தக் கட்சிகளுக்கு நிதி வழங்கப்படுகின்றது. தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரை அரசாங்கம் கூலிக்கு வைத்துள்ளது.

அத்துடன் ஈ.பி.டி.பியிடமிருந்து முழு ஆயுதங்களும் களையப்பட வேண்டும். அல்லது ஈ.பி.டி.பி. வைத்திருக்கும் ஆயுதங்களின் விபரத்தை நாடாளுமன்றத்தில் வெளியிட வேண்டும்.

15 நாடாளுமன்ற உறுப்பினர்களைக்கொண்ட தமிழ்க் கூட்டமைப்பு, உயர் பாதுகாப்பு வலயத்திலிருந்து இராணுவத்தை வெளியேற்ற வேண்டும் என்று ஏன் நிபந்தனை விதிக்கக்கூடாது?

இவர்களால் நிபந்தனை விதிக்க முடியாது. ஏனெனில், அரசாங்கத்திடம் காசை வாங்குகிறார்கள். அத்துடன் அரசாங்கம் ஒழுங்குசெய்யும் வெளிநாட்டு சுற்றுலாவிற்குச் செல்லுகிறார்கள். இப்படியிருக்கும்போது இவர்களால் நிபந்தனை விதிக்க முடியாது.

ஈ.பி.டி.பி., ரெலோ, புளொட் போன்ற கட்சிகளைப்போல் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எம்மையும் நினைத்துக்கொண்டிருக்கிறார். ஆனால், நாங்கள் அந்த நிலையில் இல்லை என்பதை தெளிவுபடுத்துவதற்கும், ஈ.பி.டி.பிக்கு நிதி வழங்குவதை நிறுத்துவதற்குமே நான் எனது எதிர்ப்பைத் தெரிவிக்கின்றேன்.

ஏனெனில், ஈ.பி.டி.பிக்கு கொடுக்கப்படும் நிதி சமாதானத்தைக் குழப்புவதற்கு கொடுக்கப்படும் நிதி. தமிழினத்திற்கு எதிராகக் கொடுக்கப்படும் நிதி. தமிழர் தரப்பிற்கு எதிராக ஓர் தமிழ் பேசும் அணியை வளர்க்க கொடுக்கப்படும் நிதி. இவற்றை தமிழீழ விடுதலைப் புலிகளோ, தமிழர் விடுதலைக் கூட்டணியோ கண்டு கொண்டு தெரியாமல் இருப்பதைப் போல் நானும் இருக்க விரும்பவில்லை.

ஸ்ரீதர் தியேட்டரில் 7 சற்றலைட் தொலைபேசி இணைப்புக்கள் உள்ளன. இவை கடந்த காலங்களில் சந்திரிகா அரசினால் வழங்கப்பட்டவை. இவற்றை அங்கிருந்து அகற்றுவதற்கு நான் கொழும்பிலிருந்து ரெலிகொம் அதிகாரிகளை அழைத்து வந்தபோது பாதுகாப்பு அமைச்சு இதற்கு இடங்கொடுக்கவில்லை.

இந்த அரசாங்கம் எமக்கு எதிரான அமைப்புக்களை மறைமுகமாக வளர்க்கின்றது என எண்ணத் தோன்றுகின்றது.

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கவின் பொங்கல் விழாவில் கலந்துகொண்டதும், சந்திரிகாவுடன் பேசியதும், சந்திரிகா கூறியதை வெளியில் கூறியதும் எனக்குள்ள சுதந்திரம். இதை யாரும் தடுக்க முடியாது.

இதேநேரம் ஜனாதிபதியின் வழிகாட்டலில் 93 நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர். தமிழரின் பிரச்சினைகளை நிரந்தரமாகத் தீர்க்க வேண்டுமெனில், இந்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவும் வேண்டும். இதை யாரும் மறைக்க முடியாது.

உயர் பாதுகாப்பு வலயத்தை நீக்குவதற்கும், சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியற் கைதிகளை விடுதலை செய்வதற்கும் ஜனாதிபதி இடம்கொடுக்கவில்லை என பிரதமரும், ஜி.எல்.பீரிஸூம் கூறுகின்றனர். எனவே, இது குறித்து ஜனாதிபதியிடம் கேட்பது தமிழ் நாடாளுமன்ற உறுப்பினராகிய எனது கடமை. ஜனாதிபதியுடன் கதைத்தால்தான் எமது பக்க நியாயத்தையும் அவருக்கு எடுத்துக்கூறலாம்.

இவ்வாறு கதைத்ததை - நான் பொதுஜன ஐக்கிய முன்னணியில் சேரப்போகிறேன். சந்திரிகாவால் மகேஸ்வரன் விலைக்கு வாங்கப்பட்டுள்ளார். என்றவகையில் வெளிவந்த கருத்துக்களெல்லாம் முற்றிலும் பொய். இவ்வாறான சம்பவம் எந்தக் காலத்திலும் ஏற்படாது என்றும் நான் பொதுஜன ஐக்கிய முன்னணியில் சேரமாட்டேன் என்பதையும் எனக்கு வாக்களித்த குடாநாட்டு மக்களுக்கும் தெரிவிக்கின்றேன்.

இந்த சர்ச்சையால் பிரதமருக்கும் எனக்கும் சில கருத்து வேற்றுமைகள் எழுந்துள்ளன. பிரதமர் என்னைச் சந்திக்க அழைத்த போதும் நான் பிரதமரைச் சந்திக்க விரும்பவில்லை. ஏனெனில் கடந்த நான்கு மாதங்களுக்கு முன்பாக எனது அமைச்சுக்குக் கூடிய அதிகாரங்களையும், நிதியையும் வழங்குமாறு கோரியிருந்தேன். அத்துடன் நான் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதேசத்தில் வேறு அமைச்சர் தனது அமைச்சு அதிகாரத்தைப் பாவித்து எமது பிரதேசத்தை ஆளுவதை அனுமதிக்க முடியாதெனவும் கடிதமொன்றை அவருக்கு அனுப்பியுள்ளேன். ஆனால, நான்கு மாதங்கள் கடந்த பின்பும் பிரதமர் ரணில் எதுவித நடவடிக்கையையும் எடுக்கவில்லை.

எனவே, ஆளும் கட்சியிலிருந்து



கொண்டு எனது கருத்துக்களை தெரிவிக்க எனக்கு சுதந்திரம் உண்டு. ஆகையால், இவ்வாறான கருத்துக்களை நான் வெளியிட வேண்டியிருக்கின்றது.

எமது மக்கள் அவர்களின் வாழ்விடங்களுக்கு சென்று வாழும்வரை, எமது மக்களுக்கு சுபீட்சமும் கிடைக்கும் வரை எனது எதிர்ப்பைப் பிரதமருக்குத் தெரிவிப்பேன். அத்துடன் எதிர்வரும் சுதந்திர தினத்தை தமிழ் மக்கள் எந்தவகையில் எதிர்க்கலாம் என ஆராய்ந்து வருகிறேன்.

எந்தக் கட்சியூடாகத் தேர்தலில் போட்டியிட்டேனோ, எந்தத் தலைவருக்குப் பின்னால் தேர்தலில் நின்றேனோ, எந்தக் கொள்கைகளுக்குக கீழ் தேர்தலில் நின்றேனோ - அந்தக் கொள்கைகளையும் அந்தக் கட்சியையும், அந்தத் தலைவரையும் எனது நாடாளுமன்றக் காலம் முடியும்வரை பின்பற்றுவேன்.

நான் எந்தக் காலத்திலும் கட்சி மாறமாட்டேன். கட்சிக்குள் இருந்தே போராடுவேன். இதற்கு எதிராக எத்தகைய அச்சுறுத்தலையோ, விமர்சனத்தையோ, ஊடகப் பிரசாரத்தையோ எதிர்கொள்ள நான் தயாராக இருக்கிறேன்.

நான் யாழ்ப்பாணத்திலுள்ள அழிவுகளையும், மக்கள் படும் துன்பங்களையும் நேரில் காட்டுவதற்குத்தான் எதிர்க்கட்சித் தலைவரை இங்கு கூட்டிவந்தேன். இவர் சமாதான முயற்சியை ஆதரிக்கும் ஒருவர். இவர் இதுவரை எந்தவித இனவாதக் கருத்துக்களையும் வெளியிடவில்லை. இவரைப்போல்தான் நாடாளுமன்ற உறுப்பினர்களான பௌசியும், ஜெயராஜ் பெர்ணான்டோ புள்ளேயும். இதனால்தான் நான் இவர்களை யாழ்ப்பாணம் அழைத்து வந்தேன். இவ்வாறு அமைச்சர் மகேஸ்வரன் மேலும் தெரிவித்தார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

## ஓயாத அலைகளில் கொல்லப்பட்ட 540 படையினரின் சடலங்கள்

# ஜனாதிபதியின் உத்தரவின் பேரிலேயே உறவினரிடம் கையளியாது எரிக்கப்பட்டன

ஓயாத அலைகள் - 3 நடவடிக்கையின்போது கொல்லப்பட்டு தென் பகுதிக்கு எடுத்துச் செல்லப்படாமல் வவுனியாவில் வைத்து எரிக்கப்பட்ட 540 படையினருக்கும், உறவினர்கள் முன்னிலையில் மரியாதை செலுத்துவது குறித்து பரிசீலனை செய்யுமாறு வவுனியா மாவட்ட நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் படையதிகாரிகளுக்கு ஆலோசனை கூறியுள்ளார்.

காணாமற்போன படையினரின் அன்னையர் முன்னணியைச் சேர்ந்த குழு, அண்மையில் வவுனியா சென்று சடலங்கள் எரிக்கப்பட்ட இடத்தை பார்வையிட்டிருந்தது. அந்த இடத்தில் எலும்புத் துண்டுகள், படையினரின் சப்பாத்துக்கள் போன்ற எச்சங்கள் காணப்பட்டதையடுத்து பொலிஸாருக்கு அவர்கள் முறைப்பாடு செய்திருந்தனர்.

தமது பிள்ளைகளின் சடலங்களுக்கு அரசு உரிய மரியாதை வழங்கவில்லை எனவும், எரிந்த இடத்தில் காணப்படும் எலும்புகளை டி.என்.ஏ. பரிசோதனைக்குட்படுத்தி அடையாளம் காண நடவடிக்கை எடுக்குமாறு கோரி அன்னையர் முன்னணி வழக்குத் தாக்கல் செய்திருந்தது. இந்த வழக்கின்போதே நீதிவான் படையதிகாரிகளுக்கு மேற்கண்ட ஆலோசனையை வழங்கியுள்ளார்.

ஜனாதிபதியின் உத்தரவின் பேரிலேயே சடலங்கள் எரிக்கப்பட்டதாக நீதிமன்றில் ஆஜரான படையதிகாரி ஒருவர் தெரிவித்திருந்தார்.

# நம்பியாரின் அறிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவிப்பேன்

## பி.பி.ஸி. பேட்டியில் மகேஸ்வரன்

உயர் பாதுகாப்பு வலயம் பற்றிய இந்திய முன்னாள் இராணுவத் தளபதி சதீஸ் நம்பியாரின் அறிக்கைக்கு முழு எதிர்ப்பையும் தெரிவிக்க தயாராக இருப்பதாக, இந்து கலாசார அமைச்சர் மகேஸ்வரன் பி.பி.ஸிக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, நம்பியாருக்கு யாழ்ப்பாணம் சம்பந்தமாக எந்தவித தொடர்புமில்லை.

இது சம்பந்தமாக தெளிவாக, விபரமாக பிரதமமந்திரிக்கு கடிதம் அனுப்பியுள்ளேன். உயர் பாதுகாப்பு வலயத்துக்கு மக்களை மீளக்குடியேற்றவிடாது சிபார்சு செய்யும் நம்பியாரோ அல்லது வேறுயாரோ எடுக்கும் முடிவுக்கு நாங்கள் கட்டுப்படப் போவதில்லை.

தாய்லாந்துப் பேச்சுவார்த்தைகளில் இடைக்கால நிர்வாகம் கொடுக்கப் போவதாகக் கூறினார்கள். வழங்குவதற்கு ஜனாதிபதி எதிர்ப்புத் தெரிவிக்கிறார் என்றார்கள். இப்படி காலத்தைக் கடத்திக்கொண்டு இந்தப் பேச்சுவார்த்தை செல்கிறதே ஒழிய மக்களுடைய சகஜவாழ்வு திரும்புவதாகவில்லை.

நாங்கள் தமிழ் மக்கள் சார்பில், விடுதலைப் புலிகளே தமிழினத்தின் ஏக பிரதிநிதிகள் என்று அரசுக்கு சொல்லியிருக்கிறோம். அதனால் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் நடைபெறும் பேச்சுவார்த்தைக்கு குந்தகம் ஏற்படும் என்பதால் நாம் எந்த ஆலோசனைகளையும் தெரிவிக்கவில்லை.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று 12 மாதங்கள் சென்ற பின்பும் கூட மக்களின் சகஜவாழ்க்கையில் எவ்வித முன்னேற்றகரமான நடவடிக்கையும் தென்படவில்லை என்றார்.

## ஈராக் மீதான போர்:

# நிலைமையை எதிர்கொள்ள அரசாங்கம் தயாராகிறதாம்!

(கொழும்பு)

நாட்டில் அவசர பொருளாதாரக் கட்டுமானங்களை மேற்கொள்வதற்காக பொருளாதாரப் புனரமைப்புக் குழு அரசாங்கத்தினால் அமைக்கப்பட்டிருக்கிறது.

ஈராக் மீது அமெரிக்கத் தாக்குதல் இடம்பெறுமானால் இலங்கையின் பொருளாதாரத்தினையும் அது மோசமாகப் பாதிக்கும். இதனைக் கருத்திற்கொண்டே அரசாங்கம் பொருளாதார புனரமைப்புக் குழுவை அமைத்திருக்கின்றது.

வளைகுடாவில் யுத்தம் ஏற்படுமானால் உருவாகும் பொருளாதார நெருககடிகளில் இருந்து மீள்வது குறித்து அறிக்கை தயாரிக்கும்படி அக்குழுவை அரசு கேட்டிருக்கிறது.

# தெல்லிப்பளை வைத்தியசாலை சுற்றுப்புறத்தை துப்புரவுசெய்ய இராணுவத்தினர் தடைவிதிப்பு!

தெல்லிப்பளை மாவட்ட வைத்தியசாலையின் சுற்றுப் புறத்தை துப்புரவுசெய்ய முயன்ற பிரதேச சபை ஊழியர்களைப் படையினர் தடுத்து நிறுத்தியுள்ளனர்.

தெல்லிப்பளை மாவட்ட வைத்தியசாலை மற்றும் புற்றுநோய் வைத்தியசாலை என்பனவற்றை மீள இயக்குவதற்கு படையினர் அனுமதித்திருந்தனர். வைத்தியசாலைகளின் சுற்றுப் புறங்களைத் துப்புரவு செய்யுமாறு அரச அதிபர், வலி.வடக்கு பிரதேச சபையிடம் கேட்டிருந்தார்.

இதனையடுத்து வலி.வடக்கு பிரதேச சபை ஊழியர்கள் தெல்லிப்பளை மாவட்ட வைத்தியசாலையின் சுற்றுப் புறங்களில் காணப்பட்ட பற்றைகளையும் கட்டடச் சிதைவுகளையும் அகற்ற நடவடிக்கை எடுத்தனர்.

ஆனால், படையினர் தலையிட்டு, பிரதேசசபை ஊழியர்களை இப்பணியைச் செய்வதற்கு அனுமதி வழங்கப்பப்படவில்லை எனக்கூறி, துப்புரவு வேலைகள் நடைபெறாமல் தடுத்துள்ளனர். இதனால் இப்பணி இடைநிறுத்தப்பட்டிருக்கின்றது.

(68)

# தென்கிழக்கு பல்கலையில் முஸ்லிம் எழுச்சி நிகழ்வுகள்

தென்கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் முஸ்லிம் எழுச்சிப் பேரணியை நடத்தவுள்ளதுடன் முஸ்லிம் தேசப் பிரகடனத்தையும் செய்யவுள்ளனர்.

பொங்குதமிழ் நிகழ்வை ஒத்ததாக இந்த நிகழ்வை செய்யவுள்ளதாக முஸ்லிம் மாணவர்கள் அறிவித்துள்ளனர். எதிர்வரும் 29ஆம் திகதி தென்கிழக்குப் பல்கலைக்கழக வளாகத்தில் இந்நிகழ்வு இடம்பெறவிருக்கிறது.

சமஷ்டி முறைத்தீர்வில் முஸ்லிம்களின் சுயாட்சியைப் பிரகடனப்படுத்துதல், வெளி நிதியுதவிகளில் முஸ்லிம்களுக்கும் பங்கீடு செய்யப்பட வேண்டும், முஸ்லிம் தலைமைகள் ஒன்று சேரவேண்டும், ஆகியவை உள்ளிட்ட ஐந்து கோரிக்கைகளை முன்வைத்தே முஸ்லிம் தேசப் பிரகடனம் மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(07)

# யுனிசெப் நிறைவேற்றுப் பணிப்பாளர் தமிழ்ச்செல்வனைச் சந்திப்பார்!

வடக்கு, கிழக்குப் பகுதியில் வாழும் சிறுவர்களின் நிலைமையை மீண்டும் வழமைநிலைக்கு கொண்டு வருவது தொடர்பாக யுனிசெப் அதிகாரிகள் எதிர்வரும் வெள்ளிக்கிழமை விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழசசெல்வனை சந்திக்கவுள்ளனர்.

இதுவிடயமாக தமிழ்ச்செல்வனுடன் முன்னரும் பேச்சு நடத்தியதாக யுனிசெப் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கரோல் டெலாமியே அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனைச் சந்திக்கவுள்ளார்.

யுனிசெப்பின் பாடசாலை மாணவர்கள் அபிவிருத்தித் திட்டங்களின் கீழ் வன்னி மாவட்டத்தில் 20 ஆயிரம் சிறுவர்கள் பாடசாலைகளில சேர்க்கப்பட்டுள்ளனர். இத்திட்டத்தையும், நிலக்கண்ணி வெடிகளின் அபாயம் பற்றி மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்ச்சி ஏற்படுத்தும் நடவடிக்கைகளையும் யுனிசெப் அதிகாரிகள் அவதானிக்கவுள்ளனர்.

# வெளிநாட்டு ஆலோசகரின் உதவியுடன் வடக்கு, கிழக்குக்கு தனித்தனி ஆளுநர்கள்

## ஜனாதிபதி சந்திரிகாவின் புதிய திட்டம்

(கொழும்பு நிருபர்)

வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்கு தனித்தனியான ஆளுநர்களை நியமனம் செய்வது குறித்து ஜனாதிபதி சந்திரிகா தீர்மானம் ஒன்றை விரைவில் மேற்கொள்ளவுள்ளார் எனக் கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்கு தனித்தனி ஆளுநர்களை நியமிப்பது தொடர்பாக வெளிநாட்டிலுள்ள ஆலோசகர் ஒருவரின் உதவியை ஜனாதிபதி நாடியுள்ளார்.

இந்த ஆலோசகர் கொழும்பு வந்து நிலைமையை ஆராய்ந்த பின்னர் ஜனாதிபதி சந்திரிகா இறுதி முடிவை எடுப்பார் எனத் தெரிய வருகிறது.

இதேவேளை -

வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்கு தனித்தனி ஆளுநர்களை நியமிப்பதற்கான திட்டத்தின் ஒரு கட்டமாக, பொ.ஐ.முவின் மூத்த தலைவர்களுக்கு இப்பதவிகளை வழங்குவது குறித்து ஆராயப்பட்டுவருகின்றது.

கிழக்கு மாகாணத்துக்கு முஸ்லிம் ஒருவர் ஆளுநராக நியமிக்கபடலாம் என்றும் கூறப்படுகிறது.

### சர்வதேச...

சொன்னார்.

அதேவேளை, இரு தரப்பினரிடையேயும் ஏற்படுகின்ற முரண்பாடுகளை ஊடகங்கள் பெரிதுபடுத்தக்கூடாது என்றும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

இந்தியாவின் நிலைப்பாடு தொடர்பான கேள்விக்குப் பதிலளித்த தூதுவர், இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் இருந்து இந்தியா விலகிவிட முடியாது என்று கூறினார்.

ஏதோவொரு வகையில் இந்தியாவின் பங்களிப்பு பெற்றுக்கொள்ளப்படும் என்றும் தெரிவித்த தூதுவர், ஏனைய சர்வதேச நாடுகள் இலங்கை விவகாரத்தில் தலையிடுவதை இந்தியா தடுக்க முடியாது என்றும் சொன்னார்.

அவ்வாறு எந்தவொரு நாட்டையும் இந்தியா தடுக்கவில்லை என்பதையும் அவர் கூறினார்.

நோர்வே நாட்டின் அரசியல் அமைப்பு ஒற்றையாட்சித்தன்மை கொண்டது. அனைத்து சமூகங்களுக்கும் ஏதோ ஒருவகையில் ஆட்சி உரிமையில் இடமளிக்கப்பட்டிருக்கின்றது என்று தெரிவித்த தூதுவர், நோர்வே ஒரு சிறிய நாடு. அங்கே எத்தகைய இனமுரண்பாடுகளும் இல்லை என்றும் கூறினார். (200)

### இணையத்தை...

சதி நடவடிக்கை என்று கூறப்படுகின்றது.

யாழ்ப்பாணத்திலுள்ள இணைய வழிகளிலும் கடந்த சனியன்று மிகத் தாமதமான தொடர்புகளே கிடைத்தமை குறிப்பிடத்தக்கது.

### குடாநாட்டில்...

டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் பதவியேற்று பதினான்கு மாதங்கள் கடந்த நிலையில் பல அமைச்சுக்கள் யாழ்.குடாநாட்டில் எந்தவித வேலைத்திட்டங்களையும் செய்யவில்லையென பிரதமருக்கு கிடைத்த முறைப்பாட்டின் நிமித்தமே மேற்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.(லி)

### புலிகளின்...

ஜனாதிபதிக்கென தனியானதொரு புலனாய்வுக் கட்டமைப்பை கொண்டிராத நிலையில் அவரது இக்கூற்றுக்களுக்கு அடிப்படை ஆதாரமும் இல்லை என படைத்துறை அதிகாரிகள் கருதுவதாகவும் அத்தகவல்கள் மேலும் தெரிவித்தன.

### தேர்தலை...

கூட்டம் ஒன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

புலிகளுடன் 5 ஆவது கட்டப் பேச்சுக்களில் அடி எடுத்து வைத்துள்ளோம் இதனால் பிரபாகரனுக்கும், ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் பிரிக்க முடியாத இறுக்கமான நிலை உருவாகியுள்ளது.

திருமலையிலுள்ள சில அரச அதிகாரிகள் சமாதானத்துக்கு விரோதமான நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். இது எனது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அரசின் சமாதான முயற்சிக்கு வெளியே இடையூறாக, தடையாக யாரும் இருக்கக்கூடாது. சமாதான நடவடிக்கைகளை குழப்பும் செயற்பாடு மீண்டும் ஒரு யுத்தத்திற்கே வழிகோலமுடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# புதிதாக வடிவமைக்கப்பட்ட சாரதி அனுமதிப் பத்திரம்!

## போக்குவரத்துத் திணைக்களம் நடவடிக்கை

இவ்வருடம் முதல் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தினால் வழங்கப்படும் சாரதி அனுமதிப் பத்திரம் புதிதாக வடிவமைக்கப்படவுள்ளது.

ஒவ்வொரு தடவையும் போக்குவரத்து விதிகளை மீறும்போது பொலிஸாரிடம் பிடிபட்டால் சாரதி அனுமதிப்பத்திரத்தில் துளை இடப்படும். இதற்காகப் பிரதான பொலிஸ் நிலையங்களில் துளையிடப்படும் இயந்திரங்கள் வைக்கப்பட உள்ளன.

வாகனச் சாரதி ஒருவர் 10 தடவை தவறு செய்து அவரது அனுமதிப் பத்திரத்தில் 10 துளைகள் போடப்பட்டால், அனுமதிப்பத்திரம் ரத்துச் செய்யப்படும் என்று மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சாரதி அனுமதிப்பத்திரம் ரத்தான சாரதி, மோட்டார் போக்குவரத்து ஆணையாளருக்கு மேன்முறையீடு செய்ய முடியும். ஆணையாளர் திருப்திப்பட்டால் மாத்திரமே தற்காலிக அனுமதிப்பத்திரம் ஒன்றை வழங்க முடியும் என்றும் -

வீதி விபத்துக்களைத் தடுப்பதற்காகவே இந்தப் புதிய நடைமுறை அமுலுக்கு வருவதாக திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை, போக்குவரத்து விதிகளை மீறும் சாரதிகளுக்கான தண்டப்பணம் 10 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## உயர்தரப் பரீட்சையில் தகவல் தொழில்நுட்பமும் ஒரு பாடமாகிறது

கல்விப் பொதுத் தராதர உயர் தர வகுப்பு மாணவர்களுக்கு தற்போதுள்ள விஞ்ஞானம், கணிதம், கலைப் பாடத்திற்கு மேலதிகமாக தகவல் தொழில்நுட்பம் என்ற பாடத்தை அறிமுகம் செய்வதற்கு தேசிய கல்வி நிறுவகம் தீர்மானித்துள்ளது.

பட்டதாரிப் பாடத்திட்டத்தில் தொழில்நுட்பமும் ஒரு பாடமாக சேர்த்துக் கொள்ள - மொறட்டுவ, றுகுணு பல்கலைக்கழகங்கள் உடன்பட்டுள்ளன என்று நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி யு.பி.குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

ஆண்டு 10 இல் இருந்து தகவல் தொழில்நுட்பம் பாடமாக அறிமுகம் செய்யப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 27.01.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.